வாராந்த சஞ்சிகை

செப்டெம்பர் 09 - 15, 2015

# சுடர் ஒளி

பக்கம் 24

விலை 30/-

# உலகை மாற்றிய குழந்தை








# உலகை மாற்றிய குழந்தை


சிரியாவின் உள்நாட்டுப்போர், அந்த நாட்டு மக்களின் வாழ்க்கையை சின்னாபின்னமாக்கி விட்டது. அவர்களில் பலரும் தங்கள் மீதியான வாழ்க்கையை கழித்தே ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தமான நிலையில், அண்டை நாடான துருக்கி வழியாக ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக சென்று கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில், கடலில் மூழ்கி பலியான குழந்தை அய்லானின் தந்தை முதலில் கனடாவிடம் அடைக்கலம் கேட்டு உள்ளார் என்ற தகவல் வெளியாகிஉள்ளது.

ஐ.எஸ். தீவிரவாதிகளின் தாக்குலுக்கு பயந்து சிரியாவின் கொபானி நகரில் இருந்து கடந்த ஆண்டு துருக்கி சென்ற அப்துல்லா குர்தி என்பவர், தனது மனைவி ரெஹான், 5 வயதான மூத்த மகன் காலிப், 3 வயதான இளைய மகன் அய்லான் ஆகியோருடன் கனடா நாட்டில் அடைக்கலம் புக அனுமதி கேட்டார். ஆனால் இதற்கு கனடா மறுத்துவிட்டது. இதனால் கிரீஸ் நாட்டுக்கு கள்ளப்படகில் சென்று அங்கிருந்து ஏதாவது ஒரு ஐரோப்பிய நாட்டில் தஞ்சம் புகுந்துவிடலாம் என்று கருதினார். துருக்கி கடல் பகுதியில் மனைவி குழந்தைகளுடன் கள்ளப் படகில் பயணம் செய்வதற்காக சுமார் பத்து இலட்சம் ரூபாயை அப்துல்லா குர்தி கொடுத்து இருக்கிறார்.

பாதுகாப்பற்ற கடல் பயணத்தை மேற்கொண்டபோதுதான் அப்துல்லா குர்தி தனது மனைவி குழந்தைகளை இராட்சத கடல் அலைகளுக்கு காவு கொடுக்க நேர்ந்தது. அதுவும் பிஞ்சுக் குழந்தை ஐலான் கடற்கரையில் முகம் புதைந்த நிலையில் பிணமாக கிடந்த புகைப்படம் உலகையே உலுக்கிவிட்டது. முதலில் அப்துல்லா குர்திக்கு அடைக்கலம் கொடுக்க மறுத்த கனடா அரசு, தற்போது ஐலானின் மரணக் காட்சியைப் பார்த்தும், எதிர்க்கட்சிகளின் வற்புறுத்தலுக்கும் பதறிப்போய் அவருக்கு அடைக்கலம் கொடுக்க முன் வந்துள்ளது. ஆனால், அப்துல்லா குர்தி கனடாவின் அழைப்பை ஏற்க மறுத்துவிட்டார். அப்துல்லா குர்தி பேசுகையில், எனது மனைவிதான் இந்த உலகம். அவள் இல்லாமல் எதுவுமே கிடையாது. மனைவியும், குழந்தைகளும் என் கைகளில் இருந்தபோதே மரணத்தை தழுவி விட்டனர். தற்போது, எனது இளைய மகன் இறந்த புகைப்படக் காட்சியை பார்த்து எனக்கு அடைக்கலம் தருவதாக கனடா அரசாங்கம் கூறுகிறது. இதை நான் ஏற்கப் போவதில்லை. எனது குடும்பத்தையே இழந்துவிட்டேன். இனி நான் கனடா சென்று வாழ்வதால் எதுவும் ஆகிவிடாது. என்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய ஐ.எஸ். தீவிரவாதிகளை சும்மாவிடமாட்டேன். நாடு திரும்பி அவர்களுக்கு எதிராக சண்டையில் குதிப்பேன் என்று கூறிஉள்ளார். இதனிடையே, அய்லான் இறந்த புகைப்படக் காட்சி கனடா நாட்டில் பெரும் அதிர்வலையை உருவாக்கி யுள்ள நிலையில், அங்கு அடுத்த மாதம் 19 ஆம் திகதி நாடாளுமன்ற தேர்தல் நடைபெற இருக்கிறது. குழந்தை இறந்த விவகாரத்தில் கனடாவில் பழமைவாத கட்சியின் அரசு ஆட்டம் கண்டு இருக்கிறது. இந்தப் பிரச்சினையால் ஆளும்கட்சி தேர்தலில் தோல்வியை சந்திக்கும் நிலையும் உருவாகி உள்ளது. அகதிகள் பிரச்சினையில் இதுவரை அலட்சியம் காட்டி வந்த பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் தற்போது, எங்கள் குழந்தைக்கு ஏற்பட்ட துயரத்தைப் போல இதைக் கருதுகிறோம் என்றும், அகதிகள் பிரச்சினைக்கு எங்களால் முடிந்தவரை உதவி செய்வோம் என்வும் இறங்கி வந்துள்ளார்.









# அதிசயக் குகைகள்

மத்திய நேபாளத்தின் வடக்கு பகுதியில் இருக்கும் முஷ்டங் ம்லைபாங்கான பகுதி. இது பல ஆச்சர்யங்களும் மர்மங்களும் நிறைந்த பகுதியாக இருக்கிறது. இப்பகுதியில் மனிதர்களால் கட்டப்பட்ட வித்தியாசமான குகைகள் நிறைய உள்ளன. இங்கு இருக்கும் ஆயிரமாயிரம் குகைகள் பற்றி தெரிந்து கொள்வதற்கு முன்னதாக முஷ்டங் பற்றி தெரிந்து கொள்வோம்! 700 ஆண்டுகளுக்கு முன்பு வரை முஷ்டாங் பல அரசர்கள் ஆண்ட பகுதி. முஸ்டாங் மாகாணம் பண்டைய திபெத்திய பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. புத்த மத வழிபாட்டிற்கும், கலைக்கும் பெயர் பெற்ற இடமாக இருந்தது. இங்கிருந்து அண்டை நாடுகளுக்கு உப்பு வணிகம் நடைபெற்றது. 17 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு, இந்தப் பகுதி பொருளாதாரத்தில் பின் தங்கியது. ஒரு கட்டத்தில் எவ்வித தொடர்பும் அற்றுப்போன பகுதியாகிப் போனது. சில குடும்பங்கள் இன்னும் இந்த குகைகளில் வசிக்கிறார்கள். குளிர் காலங்களில் வெதுவெதுப்பாக இருப்பதாகவும் ; குடி நீர் கிடைப்பது இப்பகுதியில் கடினமாக இருப்பதாகவும் சொல்கிறார்கள். இந்த முஷ்டாங் பகுதியில் இருக்கும் ஆயிரக்கணக்கான் குகைகளுக்கு உள்ளே செல்வதற்கு பாதைகள் கிடையாது. தரைப்பகுதியில் இருந்து சுமார் 155 அடி உயரத்தில் இந்த குகைகள் தென்படுகின்றன. பெரும்பான்மையானவை 3 ஆயிரம் ஆண்டுகள் பழமை யானவை. அகழ்வாராய்சியாளர் ஏறக்குறைய ஒரு லட்சம் குகைகள் இருப்பதாக மதிப்பிடுகிறார். இவற்றில் பெரும்பான்மை யானவை ஆராய்ச்சிக்கு உட்படுத்தப் பாடாதவை மட்டுமல்ல; இன்னும் பல குகை இருக்குமிடமே கண்டறியப் படாமல் இருக்கிறது.

(18 ஆம் பக்கம் பார்க்க)

- ஜனகா

# சாதிப்பாரா சம்பந்தன்?

நாடாளுமன்றில் கூச்சலிடவும், தொட்டதற்கெல்லாம் எதிர்ப்பரசியல் செய்யவுமே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பால் முடியும் என்ற கருத்தே பலரிடம் உள்ளது. முன்னரைப் போன்று இனியும் வெறும் இனமான உணர்வுகளைத் தூண்டுதல் எனும் யுக்தியை பாவித்து தன் இருப்பை கூட்டமைப்பு தக்க வைக்க முடியாது. அப்படியானால் கூட்டமைப்பு என்ன செய்ய வேண்டும்?

2009 இன் பின், 'சர்வதேச விசாரணை' பல்வேறு சந்தர்ப்பங்களையும், அரசியல் சூழ்நிலைகளையும் கடந்துவந்திருக்கிறது. தமிழகத்திலும் புலத்திலும் எழுச்சிபெற்ற சமயத்தில், சிலசமயம் நீதி கிடைத்து விடுமோ என்கின்ற ஆசை ஒவ்வொரு ஈழத் தமிழன் மனதிலும் இருந்ததென்னமோ உண்மைதான்! என்றாலும் அது இன்னமும் நிராசையாகிக் கொண்டே செல்கிறது!!

இப்போதிருக்கும் நாடாளுமன்றில், ஜே.வி.பியின் 6 உறுப்பினர்களை தவிர்த்துப் பார்த்தால் ஐ.தே.க- சுதந்திரக் கட்சி என்று சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் 'தேசிய அரசு' என்கின்ற பெயரில் இணைந்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில், சிலர் விரும்புவது போன்று த.தே.கூ தீவிர தமிழ்த் தேசிய கொள்கைகளை முன்வைத்து எதிர்ப்பரசியல் செய்தாலோ, முன்பு போன்று முழுமையான எதிர்ப்புடைய கட்சியாக செயற்பட முனைந்தாலோ, எதிர்க்கட்சிப் பதவியை எடுத்திருக்காமல் விட்டாலோ (இது கூட்டமைப்பு விரும்பிக் கேட்டு பெற்ற பதவி அல்ல,

மாறாக, சனநாயக முறைப்படி இருந்த சூழ்நிலைகளுக்கு அமைவாக கிடைத்த பதவி) நிச்சயம். 203:16 என்கின்ற விகிதாசாரத்தில் நாடாளுமன்றிலும் சரி, இருக்கின்ற தமிழ் சிங்கள இனவாத ஊடகங் களின் பங்களிப்புடன் நாட்டிலும் நிச்சயம் ஒரு முறுகல்/ நிச்சயமற்ற நிலை தோன்றியிருக்கும் / தோன்றும். அது தீவிர இனவாதிகள் ஆட்சிமைக்கவே நிச்சயம் வழிகோலும்.

மகிந்த நாடாளுமன்றில் முன் வரிசையில் வந்து அமர்ந்திருந்து தூங்கிவடிவது இப்படியான ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா என்று எதிர்பார்த்துத்தான்..!

இதுவரை இருந்த தொங்கு/ பெரும்பான்மை அரசாங்கங்களுக்கும் இப்போதிருக்கும் அரசாங்கத்தின் தன்மைக்கும் நிறையவே வேறு பாடுகள். இரண்டு நிலைமைகளை யும் ஒப்பிடவே முடியாது. அழிக்கவே முடியாதென்று நினைத்த விடுதலைப் புலிகளை ஒன்றுசேர்ந்து அழித்தது போல, அகற்றவே முடியாதென்று நினைத்த மகிந்தவை ஒன்றுசேர்ந்து கவிழ்த்த அமெரிக்கா, இந்தியா போன்ற வல்லரசு சக்திகளின் கைப்பொம்மை அரசாக கருதப்படும் இந்த மைத்திரி - ரணில் தலைமையிலான தேசிய அரசு, நாட்டினை ஆண்டுகொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு கொடுத்தாலும், எதிர்த்து நின்றாலும், சர்வதேச சக்திகளிடமிருந்து தமிழர்களுக்கு கிடைக்குமென்று நினைக்கும் தீர்வுகளோ சர்வதேச விசாரணைகளோ எட்டாக்கனி வட்டத்திற்குள் தான்.

தங்களுக்குப் பாதகமாக சர்வதேச அணுகுமுறை மாறலாம் என்று தெரிந்தும், ஏன் மகிந்தவின் ஆட்சியை கவிழ்ப்பதில் முனைப்புடன் செயற்பட்டார்கள் தமிழர்கள்? தமிழர் ஒட்டுமொத்தமாக எதிர்பார்த்த மாற்றம், ஒரு சுவாசிப்பதற்கான இடைவெளியே தவிர முழுமையான தீர்வு எந்த அரசு வந்தாலும் கிடைக்காது. இது தமிழருக்கு சொல்லித்தெரிய வேண்டிய ஒன்றல்ல. அனைத்துலக விசாரணை அவசியம் தான். பாதிக் கப்பட்ட மக்களுக்கு தீர்வும், நடாத்தி முடிக்கப்பட்ட அநியாயங்களுக்கு பொறுப்புக் கூறலும் நிச்சயம் எதிர்பார்க்கப்படுவதும் தேவையானதும்தான்.



ஆனால், அனைத்துலக விசாரணையோ, அல்லது அனைத்துலகமோ எச்சந்தர்ப்பத்திலும் இலங்கை மீது இனிமேல் அழுத்தத்தை பிரயோகிக்க முனையாது. இவர்கள் எங்களுக்கு தீர்வை பெற்றுத்தரு வார்கள் என்பதில் மக்களுக்கு இருக்கும் நம்பிக்கை 0.000001% மட்டுமே. அனைத்துலக விசாரணையே இப்படியாயின், உள்ளக விசாரணை எப்படியான முடிவுகளைக் கொண்டுவரும் என்பது சொல்லித் தெரியவேண்டியது கிடையாது. அதனால், இதனை மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் எதிர்பார்க்கவே இல்லை.

மாறாக, இவை எவையும் நடக்காதென்று தெரிந்தும், இப்போதிருக்கும் அரசியல் கால நிலையின் கட்டாயத்தின் பேரிலும் பெரிதும் பேசப்படும் 'அனைத்துலக விசாரணை' தொடர்பில் நழுவல் போக்கை கடைப் பிடிக்கும் கூட்டமைப்பிடம், இவற்றை யெல்லாம் நியாயப் படுத்த பிரதியுபகாரமாக எதிர்பார்ப்பது-

1.ஐந்து வருட காலப்பகுதியில் அனைத்து அரசியல் கைதிகளினதும் விடுதலை.

2.பாதிக்கப்பட்ட மக்களினை முறையாகவும் உடனடியாக மீள் குடியமர்த்தலும், அவர்களின் தனி மற்றும் சமூக மீள்கட்டுமானத் திற்கான உதவியும்.

3.எதிர்காலத்தில் அரசியல் நடவடிக்கைகளை கொண்டு நடாத்தவல்ல முறையான இளைஞர்களை கட்சிக்குள் உள்ளீர்த்தலும் கட்சியில் இளைஞர்களின் பங்களிப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தலும்.

4.வடமாகாண சபையினை பொறுப்புடன் கொண்டு நடாத்தல், மாகாணசபை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் சேவகர்களாக பொறுப்புக்கூற வைத்தலும், மக்கள் பிரச்சனைகளுக்கு ஒதுங்கிநிற்காது குரல்கொடுத்தலும்.

5.'த.தே.கூ'வின் சிதைவிற்கும், உதிரிகளின் வளர்ச்சிக்கும் இடம்கொடுக்காத வகையில். கூட்டமைப்பை தமிழர்களின் பலமுள்ள கட்சியாக வளர்த்தெடுத்தல்.

6.இதுவரை காலமும் பல சகாப்தங்களாக அபிவிருத்தி என்றாலே என்னவென்று தெரியாதிருந்த தமிழர் பிரதேசங்களில் அடிப்படை வசதிகளையேனும் முறையாக பெற்றுக்கொடுத்தல்.

7.முடியுமானவரை எதிர்கட்சி தலைவர் பதவியை பயன்படுத்தி வெளிநாட்டுதரப்புடனும், சகோதர மொழி மக்களுடனும் உரிய தொடர்புகளையும், உறவுகளினையும் மேம்படுத்திக் கொள்வதுடன், தமிழர் பிரச்சனைகள் தொடர்பில் அவர்களுக்கு முறையான தெளிவுபடுத்தல்களை வழங்குதலும்.

மக்களின் இத்தகைய எதிர்பார்ப்புகளை தன்னுடைய எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவியின் மூலம் சம்பந்தர் சாதித்தால், அதன் பின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை எந்த சக்தியாலும் தமிழ் மக்களின் மனப்பீடங்களில் இருந்து அகற்றவே முடியாது.

***

**தமிழ் மக்கள் எந்தக் காலத்திலும் தாங்கள் கொண்ட கொள்கை மாறாதவர்கள் என்று மீண்டும் ஒரு முறை இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேசத்துக்கும் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.**



# கிரீடத்தை இழக்கும் கிரீஸ் 03

ஜி.எஸ்.எஸ்.

கிரீஸைப் பொருத்தவரை ஐரோப்பிய யூனியனிலிருந்து வெளியேறுவது அதற்கு மேலும் பாதகங்களை விளைவிக்கும். காரணம் ஐரோப்பிய யூனியனில் உறுப்பினர் அல்லாத ஒருவருக்கு உதவ வேண்டுமென்ற தார்மிகக் கடமைகூட பிற உறுப்பினர் நாடுகளுக்குக் கிடையாது. தவிர பிரான்ஸ், ஜெர்மனி போன்ற சக ஐரோப்பிய நாடுகள் ஏற்கனவே கிரீஸுக்குப் பெரும் தொகையைக் கடனாகக் கொடுத்துள்ளன. இப்போது ஐரோப்பிய யூனியனிலிருந்து கிரீஸ் வெளியேறினால் ஐரோப்பிய மத்திய வங்கியின் மூலமாக போதிய அழுத்தத்தை கிரீஸ் மீது கொடுக்க முடியாமல் போகலாம்.

நிதி நெருக்கடியைக் காரணம் காட்டி மேற்படி நாடுகளுக்குச் செலுத்த வேண்டிய தவணைகளை கிரீஸ் மேலும் தள்ளிப் போடலாம். தவிர கிரீஸ் வெளிப்படையாகவே, தான் திவாலாகிவிட்டதாக ஒத்துக் கொண்டால் அதன் பிறகு கிரீஸிடமிருந்து கொடுத்த கடனைப் பெறுவது மேலும் கடினமாகிவிடும்.

அதே சமயம் கிரீஸின் நிலையை பிற ஐரோப்பிய நாடுகளெல்லாம் அப்படியொன்றும் கருணையோடு பார்க்கவில்லை. பிரிட்டன் பிரதமர் டேவிட் கேமரூன் சக ஐரோப்பிய நாடுகளுக்கு இப்படி ஒரு அறிக்கையை அளித்திருக்கிறார். அதில் கிரீஸ் ஐரோப்பிய யூனியனிலிருந்து வெளியேறுவதைத் தடுக்க வேண்டாமென்றும், அப்படி வெளியேறினால்தான் கிரீஸை ஆட்சி செய்பவர்களுக்குப் பொறுப்புணர்வு வரும் என்றும் அதில் அழுத்தமாகவே குறிப்பிட்டிருக்கிறார்.

"ஐரோப்பிய யூனியனிலிருந்து நாங்கள் வெளியேற விரும்பவில்லை. யூரோவைத்தான் தொடர்ந்து எங்கள் தேசிய நாணயமாக வைத்துக் கொள்ள ஆசைப்படுகிறோம்" என்று கிரீஸ் பிரதமர் கூறியிருக்கிறார்.

பிற ஐரோப்பிய நாடுகளுக்கு வேறொரு சங்கடம். பலவித இன்னல்களுக்கு நடுவேதான் பெரும் முயற்சி செய்து ஐரோப்பிய யூனியன் உருவானது. இந்த நிலையில் கிரீஸ் வெளியேறினாலோ அல்லது வெளியேற்றப்பட்டாலோ அது ஒரு தவறான முன்னுதாரணம் ஆகிவிடும். நாளைக்கு வேறு ஏதோ காரணத்துக்காக வேறொரு ஐரோப்பிய நாடு ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிந்து போக வேண்டுமென்று முடிவெடுக்கலாம்". இது தான் அவர்கள் கவலை.

இப்போதும்கூட சில விஷயங்களில் சில ஐரோப்பிய நாடுகள் தங்கள் தனித்துவத்தை நிலைநாட்டவே ஆசைப்படுகின்றன. இதன் காரணமாக பொதுவான போக்கிலிருந்து அவை விதிவிலக்கு பெற்றுள்ளன. எடுத்துக் காட்டாக ஷெங்கன் விசாவைக் குறிப்பிடலாம்.

முன்பெல்லாம் நெதர்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரியா, ஸ்பெயின் போன்ற நாடுகளுக்குச் செல்ல வேண்டுமானால் ஒவ்வொரு நாட்டிலிருந்தும் விசா பெற வேண்டும். ஆனால் இப்போதெல்லாம் ஷெங்கன் எனப்படும் பொதுவான விசாவைப் பெற்றால் இத்தனை நாடுகளுக்கும் தடையின்றிச் செல்லலாம். இவற்றை இணைக்கும் நீண்ட தூர வேக ரயில்களும் உண்டு. போர்களினால் சிதறுண்ட ஐரோப்பா ஒருவழியாக பாடம் கற்றுக் கொண்டதன் ஓர் அடையாளமாகவும் இதைக் குறிப்பிடலாம்.



ஒருவரது எல்லையை மற்றவர் மதிப்பதற்கான குறியீடாகவும், தங்களது ஒன்றுபட்ட சிந்தனையை வெளிக்காட்டுவதாகவும் ஷெங்கன் விசா இருப்பதாக இவை கருதுகின்றன. ஆனால் பிரிட்டன் செல்ல வேண்டுமானால் நீங்கள் அந்த நாட்டிலிருந்து தனியானதொரு விசாவைப் பெற வேண்டும். ஒரு காலத்தில் பல காலனி நாடுகளைக் கொண்டிருந்ததாலும் இப்போதும் அவற்றில் சிலவற்றில் (நாடாளுமன்ற ஜனநாயகம் இருந்தால்கூட) அரசியின் தலைமையை ஏற்கும் இயல்பு இருப்பதாலும் பிரிட்டனுக்கு, தான் தனித்தன்மை கொண்ட நாடு என்ற எண்ணம்.

தவிர கடலால் சூழப்பட்ட நாடு என்பதால் பிற நாடுகளுடன் எல்லைப் பிரச்சினை என்பது தனக்கு இல்லையென்று கருதுகிறது பிரிட்டன். இதன் காரணமாக பொதுவான ஐரோப்பிய அமைப்பின் இராணுவ 'பட்ஜெட்'டுக்கு அது போதிய நிதி ஒதுக்குவதில்லை.

ஆக ஐரோப்பிய யூனியனில் இருந்தும் கூட சில நாடுகள் தங்கள் தனித்தன்மையை இழக்க மறுக்கின்றன. எனவே வேறுபாடுகளையும் கொண்ட ஒற்றுமை.

என்றாலும் பொருளாதார விஷயத்தில் சக உறுப்பினருக்கு கருணைகாட்ட சில நாடுகள் முன்வரவில்லை. எனினும் அவற்றுக்கு வேறொரு உறுத்தல் தோன்றியிருக்கிறது. கிரீஸ் அளவுக்கு இல்லையென்றாலும் வேறு சில ஐரோப்பிய நாடுகளும் நிதி நெருக்கடியில் உள்ளன. இத்தாலி, ஸ்பெயின், போர்த்துகல் போன்றவற்றை இந்தப் பட்டியலில் சேர்க்கலாம். அப்படியானால் அடுத்து அவர்களும் வெளியேற்றம் தானா?

நாடுகளின் எண்ணிக்கை குறையக் குறைய (அவை பொருளாதாரக் கோணத்தில் பலவீனம் கொண்டவையாக இருந்தாலும்கூட) ஐரோப்பிய யூனியனில் வலிமை குறையும். அரசியல் ஒற்றுமை என்கிற கோணத்தில் ஐரோப்பாவில் அமைதி நிலவ வைக்க அது எடுக்கும் முயற்சிகளில் தாக்கம் குறையும். போர் மூளும் சூழல் வருங்காலத்தில் உண்டானால் அப்போது ஐரோப்பிய யூனியன் குரல் உலக அளவில் எந்த அளவுக்கு எடுபடும் என்பது தெரியாது.

கிரீஸ் ஒரு மிகச் சிறிய நாடு. அது ஐரோப்பிய யூனியனிலிருந்து விலகினாலோ யூரோவை இனி தனது நாணயமாக கொள்ளவில்லை என்றாலோகூட ஐரோப்பாவுக்குப் பெரிதாக எந்த பாதகமும் இருக்காது. சொல்லப்போனால் எப்போது பார்த்தாலும் சக உறுப்பினர் நாடுகளிடம் நிதி உதவி கேட்டுக் கொண்டே இருக்கும் கிரீஸ் வெளியேறினால் ஐரோப்பிய யூனியனுக்கு நல்லதுதான்" என்பவர்களும் உண்டு. பிரிட்டன் பிரதமரும் இந்தக் கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஆனால் கிரீஸ் ஆதரவாளர்கள் வேறொரு கோணத்தை முன்வைக்கிறார்கள். ஒரு நாட்டில் பல மாநிலங்கள் இருந்தால் பின்தங்கிய மாநிலத்துக்கு மத்திய அரசு அதிக உதவ. அளிக்கும். முன்னேறிய மாநிலத்தின் வருமானத்திலிருந்து பின்தங்கிய மாநிலத்துக்கு செல்வத்தைப் பாய்ச்சும். அமெரிக்காகூட தனது மாநிலங்களை அப்படித்தான் நடத்துகிறது.

ஐரோப்பிய யூனியன் என்பது பல்வேறு நாடுகளைக் கொண்டிருந்தாலும் ஓர் ஒருமித்த அமைப்பு. எனவே பொருளாதாரச் செழிப்பு மிகுந்த நாடுகளை கிரீஸ் போன்ற நாட்டுக்கு உதவி செய்யுமாறு வற்புறுத்துவதுதான் ஐரோப்பிய யூனியனுக்கு அழகு. மானியமாக இல்லையென்றாலும் கடனாகவாவது (கிரீஸின் நிதிநிலைமை சரியாகும் வரையில்) அதற்கு நிதி உதவி அளிக்கத்தான் வேண்டும். வசூலிப்பதில் கெடு கூடாது. தவணைத் தொகைகளைக் குறைத்துக் கொண்டு தவணைக் காலத்தை நீட்டிக்க வேண்டும்".

(வளரும்)

# கரும்புத் தோட்டத்தில் பிறந்த புரட்சியின் இடி முழக்கம்



> **கொரில்லா பானியிலான தாக்குதலுக்கு தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டார். அப்போது அவருடன் வந்து சேர்ந்தவர்தான் அர்ஜெண்டினாவைச் சேர்ந்த எர்னஸ்டோ சே குவேரா. இருவரும் இணைந்து பாடிஸ்டா அரசுக்கு எதிரான கொரில்லா போருக்கு தலைமை தாங்கினர்.**
>
> **1953ஆம் ஆண்டு முதல் 1959 ஜனவரி முதல் திகதி வரை சுமார் ஐந்தரை ஆண்டுகள் இருவரும் பல தாக்குதலுக்குப் பிறகு, பனி, மழை என பொருட்படுத்தாது. குளிரிலும் வெயிலிலும் உழைக்கும் மக்களின் விடுதலைக்காக போராடினர். ஆயுதப்போரட்டத்தின் மூலம் கியூப புரட்சியை முன்னெடுத்துச் சென்றனர்.**

***1926***ஆம் ஆண்டு ஒகஸ்ட் 13ஆம் திகதி கியூபாவின் கரும்புத் தோட்டத்தில் பிடல் காஸ்ட்ரோ பிறந்தார். 1941இல் தனது 15ஆவது வயதில், ஃபிடல் காஸ்ட்ரோ பெலன் கல்லூரியில் சேர்ந்தார். இங்கு படிக்கும்போதே காஸ்ட்ரோவுக்கு கம்யூனிசம் எனும் பெயர் தெரியவந்தது.

காஸ்ட்ரோ சிறு வயதில் ஒரு தீவிர கத்தோலிக்கர். ஆனால் பிறகு அவர் ஒரு நாத்திகராக மாறிவிட்டார். 1945ஆம் ஆண்டுகளில் இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்தபோது காஸ்ட்ரோ உயர்கல்வியை முடித்திருந்தார். ஸ்பானிய உள்நாட்டுப் போரும் முடிவுக்கு வந்தது.

காஸ்ட்ரோவிற்கு அப்போது கம்யூனிசம் பற்றி எதுவும் தெரியாது. ஆனால் அவர்களை எல்லோரும் ஒதுக்கிவைத்தார்கள் என்பது மட்டும் அவருக்கு தெரியும். 1945ஆம் ஆண்டு ஹவானா பல்கலைகழகத்தில் சேர்ந்த பிறகுதான், அரசியலால் ஈர்க்கப்பட்டு, கல்லூரி அரசியலிலும் பங்கு கொண்டார்.

அப்போது, கல்லூரியில் இரண்டு முக்கிய கட்சிகள் இயங்கி கொண்டிருந்தன. ஒன்று கம்யூனிஸ்ட் கட்சி, மற்றொன்று ஹொசே மார்த்தியின் ஆர்த்தோடாச்சோ கட்சி. காஸ்ட்ரோ கம்யூனிட் கட்சியில் இணைந்தார். 1952ஆம் ஆண்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கையாள் பாடிஸ்டா கியூச அரசின் அரியணை ஏறினார்.

பாடிஸ்டா அரசில் அடக்குமுறைகளும், ஊழல்களும் நிறைந்திருந்தன. அதே வேளையில், தொழிலாளர்களும், உழைக்கும் மக்களும் பிணியிலும், வறுமையில் துவண்டனர். இதனிடையே ஃபிடல் கல்லூரி மாணவர் தேர்தலில் வெற்றி கண்டார். பின்னர், பாடிஸ்டா அரசின் இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்த மேற்கொண்ட முயற்சியில் தோல்வியடைய அவரை இராணுவத்தினர் கைது செய்தனர்.

அப்போது, நீதிமன்றத்தில் ஃபிடல் காஸ்ட்ரோ புரட்சிகரமான உரை ஒன்றை நிகழ்த்தினார். இதுவே, பின்னாளில் 'வரலாறு என்னை விடுதலை செய்யும்' (THE HISTORY WILL ABSOLVE ME) என்ற பெயரில் வெளிவந்தது.

நீங்கள் என்னை தண்டியுங்கள், அதைப் பற்றி எனக்கு கவலை யில்லை, வரலாறு எனக்கு நீதி வழங்கும் என்றார். பின்னர், 1955ஆம் ஆண்டு மே 15ஆம் திகதி காஸ்ட்ரோ விடுதலை செய்யப்பட்டார்.

அதன் பின்னர், கொரில்லா பானியிலான தாக்குதலுக்கு தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டார். அப்போது அவருடன் வந்து சேர்ந்தவர்தான் அர்ஜெண்டீனாவைச் சேர்ந்த எர்னஸ்டோ சே குவேரா. இருவரும் இணைந்து பாடிஸ்டா அரசுக்கு எதிரான கொரில்லா போருக்கு தலைமை தாங்கினர்.

1953ஆம் ஆண்டு முதல் 1959 ஜனவரி முதலாம் திகதி வரை சுமார் ஐந்தரை ஆண்டுகள் இருவரும் பல தாக்குதலுக்குப் பிறகு, பனி, மழை என பொருட் படுத்தாது, குளிரிலும் வெயிலிலும் உழைக்கும் மக்களின் விடுதலைக் காக போராடினர். ஆயுதப் போரட்டத் தின் மூலம் கியூப புரட்சியை முன்னெடுத் துச் சென்றனர்.

* * *

பனாமாவில் நடைபெற்ற மாநாட்டுக்காக கலந்துகொள்ள சென்றபோது, 50 ஆண்டுகளுக்கு பிறகு, இந்த ஆண்டு ஏப்ரல் மாதம், தற்போதைய கியூப அதிபர் ரால் காஸ்ட்ரோவும், அமெரிக்க அதிபர் ஒபாமாவும் சந்தித்துக் கொண்டனர்.

சே குவேரா, லத்தீன் அமெரிக்காவின் எங்களுடைய இந்த புரட்சி அனைத்து அமெரிக்க உடைமைகளுக்கும் ஆபத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. நாங்கள் இந்த நாடுகளுக்கு சொல்கிறோம், இங்கே எங்களின் சொந்த புரட்சியை உருவாக்குகிறோம் என்று முழங்கினார்.

1959ஆம் ஆண்டுக்கு பிறகு கியூபா தன்னை கம்யூனிஸ நாடாக அறிவித்துக்கொண்டது. தனது நாடு ஒருபோதும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிந்து போகாது என்று அறிவித்தார். தனது நாட்டின் செல்வ வளங்கள் அனைத்து கியூப மக்களுக்கே என்றார்.

1960ஆம் ஆண்டு, ஐ.நா மாமன்றத்தில் ஃபிடல் காஸ்ட்ரோ ஆற்றிய உரை மிகவும் பிரசித்தி பெற்றது. 4 மணி 29 நிமிடம் கொண்ட இந்த மிக நீண்ட உரையாகும். அதற்கும் மேலாக, 1986 ஆம் வருடம், ஹவானாவில் நடந்த கம்யுனிஸ்ட் கட்சிக் கூட்டத்தில் அவர் பேசிய நேரம், 7 மணி நேரம், 10 நிமிடங்கள் ஆகும். கிட்டத்தட்ட இரண்டு கின்னஸ் சாதனையாகும்!

இந்த நிலையில், அமெரிக்க ஏகாதிபத்திய அரசுகள், கியூபாவை பணிய வைக்க முயற்சிகள் பலிக்கவில்லை. இதனால், கியூபா மீது பொருளாதார தடைகளை விதித்தது. மேலும்,



தீவிரவாத அச்சுறுத்தல் உள்ள நாடு என்ற முத்திரையையும் அபாண்டமாக சுமத்தியது. ஆனாலும், ஃபிடல் காஸ்ட்ரோ அசரவில்லை.

* * *

1959 ஆம் ஆண்டிற்குப் பிறகு கியூப அதிபரும் அமெரிக்க அதிபரும் சந்தித்துக் கொள்வது இதுவே முதன் முறையாகும். கடைசியாக, கியூபா தலைவர் ஃபிடல் காஸ்ட்ரோ, 1959 ஆம் ஆண்டு அப்போதைய அமெரிக்க துணை அதிபராக இருந்த ரிச்சர்ட் நிக்சனும் சந்தித்து பேசியதுதான் கடைசி தடவையாகும்.

இத்தனை பெருமைகளுக்கும், கியூப மக்களின், உலக மக்களின் உரிமைகளுக்கும் பேசிய, எழுதிய, போராடிய, வாழ்ந்த மகத்தான தோழர் ஃபிடல் காஸ்ட்ரோவின் பிறந்த நாள் 13-08-15 ஆகும்.

உலகத்தில் எந்த மூலையிலும் சுரண்டப்படுபவர்கள் நமது தேசாபிமானிகளே, சுரண்டுபவர்கள் நமது எதிரிகள் உண்மையில் உலகமே நமது நாடு, உலகம் முழுவதும் உள்ள புரட்சியாளர்கள் நமது சகோதரர்கள் என்ற அவரின் வார்த்தைகளை கொண்டாடுவோம்

**- லெனின் அகத்தியநாடன்**

# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

sudarolijaffna@gmail.com

361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 567 7609


## திருடனாய்ப் பார்த்துத் திருந்த வழித்தடம் ஒன்று வேண்டும்

திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால், திருட்டை ஒழிக்க முடியாது - என்பது தமிழகத்தின் பிரபல கவிஞரான பட்டுக்கோட்டைக் கல்யாண சுந்தரம் இயற்றிய பாடல் ,அந்தக் காலத்தில் மிகப் பிரபல்யம் பெற்றிருந்தது.

எங்கள் பாடசாலைக் காலத்தில், அர்த்தமுள்ள அந்தப் பாடல், பட்டி தொட்டி எங்கும் மிகப் பிரபல்யமாக இருந்தது.

எமது பிரதேசத்தில் அந்தப் பாடல் மீண்டும் இப் போது மிகப் பெரிய அளவில் பொருந்துகிறது. பல புதுப்புது உத்திகளில் திருட்டுத்தொழில் எண்ணிக்கை யில் மேலுயர்ந்து வருகிறது.

அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிடுவது பொருத்தம்.

நாடாளுமன்றத் தேர்தல் நாளன்று, அயல் வீடு ஒன்றுக்குள் புகுந்து -- ஜன்னல் வழியாக இறங்கி - சுமார் இரண்டு லட்சத்து இருபத்திமூவாயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணத்தைத் திருடியதாகச் சந்தேகிக்கப்படும் 68 வயதான பெண் பிரசை ஒருவர் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப் பட்டார்.

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் பக்தை ஒருவரின் இரண்டரைப் பவுண் நகை திருடப்பட்டிருந்தது. அவர்களில் ஒரு பெண், பொலிஸாரால் கைது செய்யப் பட்டார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து, இணுவிலில் உள்ள வீடு நோக்கி, இரவு எட்டு மணி அளவில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த வேளையில், இளைஞர் ஒருவர் தாக்கப்பட்டு , தங்கச்சங்கிலி மற்றும் தொலைபேசி மற்றும் பல பெறுமதி மிக்க பொருள்களையும் பறிகொடுத்தார்.

ஆயுத முனையில் அச்சுறுத்தி, தங்க நகைகள், ஏனைய உடைமைகளை அபகரித்த திருடர்களை, அயலவர்களின் உதவியுடன் பிடித்தனர், வரணியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த வயோதிபர்கள் .

லண்டனில் இருந்து நல்லூர்த் திருவிழாவுக்கு வந்த ஒருவரின் வீட்டில், இந்த மாதம் முதல் வாரத்தில் பெரும் திருட்டுச் சம்பவம் நடந்தேறியது. சுமார் முப்பது லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருட்டுப் போனதாக செய்திகள் வெளிவந்திருந்தன.

திட்டமிட்டு, திருடுபவர்களை இனம் கண்டு அவர்களைச் சட்டத்தின் பிடியில் இறுக்கி வைத்துத் தண்டணை வழங்குவதை விட வேறு மார்க்கம் இல்லை.

தமது வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்கு வசதி அற்றவர்களே, அனேக சந்தர்ப்பங்களில் திருட்டுத் தொழிலில் ஈடுபடுகிறார்கள் என்பது தவறு அன்று. அவர்களுக்கு தொழில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கக், கொழும்பு அரசு மனதார்ந்து செயற் படும் என்று எதிர்பார்க்கவும் வாய்ப்பில்லை.

ஆகையால், மாகாண மட்டத்தில் தொழில் முயற்சிகளை, திருட்டுப் பேர்வழிகளுக்கு கிடைக்கச் செய் வதே உகந்த பயன்தரும் உத்தியாக அமையும். திருட்டுத் தொழிலினால், தீரான வாழ்க்கையை நடத்தலாம் என்ற எண்ணத்தை அடியோடு போக்குவதற்கான வகையில் அதற்கென விசேட வழிவகைகள் கண் டறியப்பட வேண்டும்; இனம் காணப்படுவது முதல் பணியாக அமையட்டும்.

வெறுமனே கலந்துரையாடல், திட்டம் வகுத்தல் என்பவற்றில் தொங்கிக்கொண்டிருக்காது, நடைமுறைச் சாத்தியமான வழிதுறைகளைக் கண்டறிய வேண்டும். மாகாண சபையின் அனுசரணையுடன், இவற்றை செயற்படுத்துவதே பயன்தர வல்லதாக அமையும். கொழும்பு அரசாங்கத்தை கூட்டணிக்கு இழுக்காமல், எம்மாலும் செய்ய இயலும் என்பதனை நிரூபித்துக் காட்டுவதே பெரிதும் சிறப்பானது.

## அரபு நாடுகளின் பெருமையும் சவுதி அரேபியாவின் தலைமையும்

பக்தாத், கெய்ரோ, டமஸ்கஸ் ஆகியவை வரலாற்றில் பெரும் இடத்தை பிடித்த நகரங்கள். அறிவில் மேன்மை, உலக நாடுகளுடன் வர்த்தகம், படைவலிமை ஆகியவற்றால் அந்த நகரங்களின் ஆட்சியாளர்கள் தமது அரசுகளை உலக வல்லரசுகளாக நிலை நிறுத்தினர். எகிப்தின் வரலாற்றுப் பெருமை நிகரில்லாதது. முகம்மது நபி இஸ்லாமிய மார்க்கத்தை உருவாக்கிய பின்னர் கிபி 661ஆம் ஆண்டு டமஸ்கஸில் நிறுவப்பட்ட 'உமய்யிட்' வம்ச அரசு கிபி 750 ஆம் ஆண்டு வரை பல நாடுகளை ஆளும்



பேரரசாக இருந்தது. அதைத் தொடர்ந்து பாக்தாத்தில் உருவான 'அப்பாஸிட்' வம்ச அரசு ஐநூறு ஆண்டுகள் ஒரு பேரரசாக ஆட்சி புரிந்தது. இந்த ஆட்சிக்காலம் அரபுக் கலாச்சாரத்தின் பொற்காலம் எனப்படுகின்றது. ஆனால் இன்று சிரியாவும் ஈராக்கும் நாடுகள் என்ற தகுதியை இழக்கும் அளவிற்கு அங்கு உள்நாட்டுப் போர் நடக்கின்றது. எகிப்து இஸ்ரேலுடனான போர்களில் தோல்வியடைந்து தனது பெருமைகளை இழந்து நிற்கின்றது.

### அரபுலகம் பின்தங்குமா?

இன்று ஐரோப்பிய நாடுகள் உலகின் முன்னணி நாடுகளாகவும், ஆசிய நாடுகள் எல்லாத் துறையிலும் முன்னேறும் நாடுகளாகவும் மற்ற ஆபிரிக்க நாடுகள் வேகமாக அறிவிலும் பொருளாதாரத்திலும் வளரும் வேளையில் பெருமை மிக்க அரபு நாடுகள் பின் தங்கிவிடுமா என்ற அச்சம் எழுந்துள்ளது. சிரியா, ஈராக், லிபியா ஆகிய நாடுகளில் மோசமான உள்நாட்டுக் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. சிரியா சிதறுபடுமா என்ற அச்சமும் இருக்கின்றது. ஆசியாவில் மக்களாட்சி முறைமை மேம்பட்டுக் கொண்டிருக்கையில் மற்ற ஆபிரிக்க நாடுகள் மக்களாட்சி முறைமையில் ஆட்சியை சிறப்பாக நடத்தும் நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கையில் அரபு நாடுகளில் மக்களாட்சி வரும் நிலை அண்மையில் இல்லை. துனிசியா மட்டும் மக்களாட்சியை மிகவும் சிரமப் பட்டு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றது.


மொரிட்டானியா, மொரொக்கோ, அல்ஜீரியா, துனிசியா, லிபியா, சாட், லெபனான், எகிப்து, சூடான், ஜோர்தான், சிரியா, ஈராக், குவைத், பாஹ்ரேய்ன், கட்டார், ஐக்கிய அமீரகம், சவுதி அரேபியா, ஓமான், யேமன் ஆகிய 19 நாடுகள் அரபு நாடுகளாகும். ஈரான், துருக்கி, கிழக்கு ஆபிரிக்கா தென் அமெரிக்கா, ஐரோப்பா, தென் கிழக்கு ஆசியா ஆகிய நாடுகளிலும் அரபுக்கள் வசிக்கின்றனர். அரபுக்களில் 93 விழுக்காட்டினர் இஸ்லாமியர்களாகும். அரபு மொழிபேசும் யூத மதத்தினரை அரபுக்கள் என ஒத்துக் கொள்ளப்படுவதில்லை. கிறிஸ்தவ மதத்தைத்தழுவிய அரபுக்கள் இப்போதும் அரபுக்களாகவே கருதப்படுகின்றனர்.

### ஒன்றுபட்டால்தான் உண்டு வாழ்வு

அரபு நாடுகளிடையே ஒரு ஒற்றுமை என்றும் இருந்ததில்லை. முன்னாள் எகிப்திய அதிபர் அப்துல் கமால் நாசர் அரபு நாடுகளை ஒன்று படுத்த முயன்றார்.

- வேல்தர்மா

முதற்கட்டமாக அவர் சிரியாவையும் எகிப்தையும் இணைத்தார். ஆனால் அந்த இணைப்பு நீடிக்கவில்லை. அப்போது அரபு நாடுகளில் சிலவற்றில் மன்னர் ஆட்சியும் சிலவற்றில் மன்னர்களைப் பதவியில் இருந்து விலக்கிய படைத் தளபதிகளின் ஆட்சியும் நிலவின. இந்த இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் வெறுத்தனர். அப்போது எகிப்தின் கமால் நாசர், சிரியாவின் ஹஃபீஸ் அல் அசாத். லிபியாவின் மும்மர் கடாஃபி, ஈராக்கின் சதாம் ஹுசைன் ஆகியவர்கள் உலக அரங்கில் தம்மை இஸ்லாமியர் களாக முன்னிறுத்தாமல் அரபுக்களாக முன்னிறுத்தினர். தமது நாடுகளிலும் மத சார்பற்ற ஆட்சியை நடாத்தினர்.



**முரண்பாடுகள்**

அரபுக்களின் இரு பெரும் புனித நகரங்களையும் தன்னகத்தே கொண்ட சவுதி அரேபியா அரபு நாடுகளுக்கு மட்டுமல்ல இஸ்லாமிய உலகத்திற்கே தலைமை தாங்க வேண்டிய ஒரு நாடு. ஆனால் அது தன்னை அரபு சுனி இஸ்லாமிய நாடாக முன்னிறுத்துவதால் பல பிரச்சினைகளை உருவாக்கும் நாடாக இருக்கின்றது. அரபுக்களைக் கொண்டிராத துருக்கியுடன் அது இன ரீதியில் முரண்படுகின்றது. சியா முஸ்லிம்களைக் கொண்ட ஈரானுடன் அது இனரீதியாகவும் இஸ்லாமிய மதக் கோட்பாட்டு ரீதியாகவும் முரண்படுகின்றது. இஸ்லாமிய அரசு என்பதைப் பிரகடனப் படுத்தியுள்ள ஐ.எஸ் அமைப்பு தனது இஸ்லாமிய அரசில் ஈராக், சிரியா, லெபனான், பலஸ்த்தீனம், ஜோர்தான், துருக்கியின் ஒரு பகுதி போன்றவற்றை உள்ளடக்கப்பட்டுள்ளது என்கின்றது. அத்துடன் தாம் முழு உலகையும் கைப்பற்றுவோம் என்றும் பாரிஸ், இலண்டன், நியூயோர் நகரங்களின் வீதிகளில் நாம் படுகொலை புரிவோம் என்கின்றது.

**இடைவெளியை சவுதீ நிரப்புமா?**

மற்ற அரபு நாடுகள் பொருளாதாரப் பிரச்சினையாலும் உள்நாட்டுக் குழப்பங்களாலும் மோசமான நிலையில் இருக்கையில் வலுவான நிலையில் இருக்கும் சவுதி அரேபியாவால் அரபு நாடுகளுக்கு தலைமைத்துவம் வகிக்க முடியுமா? ஐக்கிய அமெரிக்காவும் அரபு நாட்டு உறுதி நிலையைப் பேண சவுதி அரேபியாவும் தோள் கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றது. அதன் முதற்படியாக யேமனின் உள்நாட்டுக் குழப்பத்தைத் தீர்க்கும் (தீர்த்துக் கட்டும்) பொறுப்பை சவுதி அரேபியா ஏற்றுக் கொண்டது. ஐக்கிய அரபுக் குடியரசும் சவுதி அரேபியாவிற்குக் கை கொடுக்கின்றது. ஐ எஸ் அமைப்பு சவுதி அரேபியாவிற்கு எதிராகவும் தாக்குதல்கள் செய்கின்றது. ஐ எஸ் அமைப்பின் உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப் படும் 431பேர் சவுதியில் கைசெய்யப்பட்டுள்ளனர். சுனி முஸ்லிம்களைக் கொண்ட பல அரபு நாடுகள் தமக்கு இஸ்ரேலிலும் பார்க்க சிரியா, ஈரானாலும் ஹிஸ்புல்லா அமைப்பினாலும் அதிக ஆபத்து எனக் கருதுகின்றன. அந்த ஆபத்தில் இருந்து சவுதிதான் தம்மைப் பாதுகாக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றன. இவை ஈரானை அடக்குவதற்கு இஸ்ரேலுடன் இப்போது பகிரங்கமாக ஒத்துழைக்கின்றன. தற்போது அரபு நாடுகளில் நிலவும் மோசமான சூழ்நிலை, ஒரு புவிசார் அரசியல் மீளமைப்பை வேண்டி நிற்கின்றது. ஆனால் அமெரிக்காவின் ஒத்துழைப்பு சவுதி தலைமை தாங்குவதற்கு அவசியமாகும். ஆனால் அமெரிக்கா இஸ்ரேலுடன் நெருங்கிய உறவைப் பேணுவது மட்டுமல்ல ஈரானுடனும் தனது உறவை மேம்படுத்த விரும்புகின்றது.

**பணத்தில் படைவலிமை**

சவுதி அரேபியா ஒரு வலிமை மிக்க படைத்துறையைக் கொண்டுள்ளது. அது அமெரிக்காவிடமிருந்து பல புதிய தர படைக்கலன்களை வாங்கிக் குவித்துள்ளது. ஆனால் சவுதியின் படையினருக்கு போர்க்கள அனுபவம் மிகக் குறைவானதே. இந்த அனுபவமின்மை யேமனில் தற்போது வெளிப்படுகின்றது. அமெரிக்காவின் Fd15 போர் விமானங்கள், பிரித்தானியர்வின் Paveway IV எனப்படும் துல்லியமாகத் தாக்கக் கூடிய வழிகாட்டல் ஏவுகணைகள் போன்ற படைக்கலன்கள் சவுதி அரேபியப் படைகளின் முக்கிய படைக்கலன்களாகும் 2020ஆம் ஆண்டு உலகின் படைத்துறைச் செலவீனப் பட்டியலில் சவுதி ஐந்தாவது இடத்தில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**சவுதியின் பொருளாதாரம் எதிரிக்குச் சகுனப்பிழை**

சவுதி அரேபியா பல நாடுகளுடன் நல்லுறவைப் பேணுகின்றது. அதன் அரசுறவு (இராசதந்திரம்) காசோலை அரசுறவு என விபரிக்கப்படுவதுண்டு. சவுதி அரேபியா தனது பணத்தின் மூலம் பன்னாட்டரங்கில் நட்பை வாங்குகின்றது என்பதற்காக இப்படி விபரிக்கப்படுவதுண்டு. சவுதி அரேபியா ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கழகத்தின் ஆணையாளர் பொறுப்பைக் கூட எடுக்க முயற்சித்தது. எகிப்து, பாகிஸ்த்தான், ஜோர்தான், பாஹ்ரேன் போன்ற நாடுகளின் நட்பு சவுதியின் பணத்தால் பெற்ற நட்புக்களே. சவுதியின் பணத்திற்கு ஐக்கிய அமெரிக்காவின் அரசுறவியலாளர்களே விலை போவதுண்டு.

**சவுதியின் பொருளாதாரம்**

சவுதி அரேபிய மன்னர் குடும்பம் வெறுக்கும் சியா முஸ்லிம்களின் ஒரு பிரிவான அலவைற் இனத்தைச் சேர்ந்தவரான பஷார் அல் அசாத்தை சிரிய ஆட்சி பீடத்தில் இருந்து அகற்ற சவுதி பெரிதும் விரும்புகின்றது. அதற்கு ரஷ்யா தடையாக இருக்கின்றது. இதனால் ரஷ்யாவிற்குப் பாடம் போதிக்க சவுதி முயல்கின்றது. சவுதி தனது எரிபொருள் உற்பத்தியை அதிகரித்து உலகச் சந்தையில் எரிபொருள் விலையை விழச் செய்து கொண்டிருக்கின்றது. எரிபொருள் ஏற்றுமதியில் பெரிதும் தங்கியிருக்கும் ரஷ்யப் பொருளாதாரம் அதனால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றது. இது, சவுதியின் பொருளாதாரத்தையும் பாதிக்கின்றது. சவுதியின் எரிபொருள் உற்பத்தி அதிகரிப்பு இன்னும் ஒரு நோக்கத்தைக் கொண்டது. எரிபொருள் விலை வீழ்ச்சியடைவதால் புதிய எரிபொருள் அகழ்வு முயற்சிகள் பல இடை நிறுத்தப்படுகின்றன. எரிபொருள் வீழ்ச்சி சவுதி அரேபியாவின் பொருளாதாரத்தையும் பாதிக்கின்றது. சவுதி இப்போது 27 பில்லியன் டொலர் கடன் வாங்க வேண்டிய நிலையில் உள்ளது. சவுதி நீண்ட கால எரிபொருள் விலை ஆகக் குறைந்தது 85 டொலர்களாக இருக்க வேண்டும் என நினைக்கின்றது ஆனால் தற்போது 50 டொலர்களுக்கும் குறைவாக இருக்கின்றது. இது சவுதியின் பொருளாதாரத்திற்கு உகந்தது அல்ல. ஈரான் தனது நிதி நிலைமையைச் சமாளிக்க எரிபொருள் விலை 130

(22 ஆம் பக்கம் பார்க்க)

**அரபுக்களின் இரு பெரும் புனித நகரங்களையும் தன்னகத்தே கொண்ட சவுதீ அரேபியா அரபு நாடுகளுக்கு மட்டுமல்ல இஸ்லாமிய உலகத்திற்கே தலைமை தாங்க வேண்டிய ஒரு நாடு. ஆனால் அது தன்னை அரபு சுனி இஸ்லாமிய நாடாக முன்னிறுத்துவதால் பல பிரச்சினைகளை உருவாக்கும் நாடாக இருக்கின்றது. அரபுக்களைக் கொண்டிராத துருக்கியுடன் அது இன ரீதியில் முரண்படுகின்றது. சியா முஸ்லிம்களைக் கொண்ட ஈரானுடன் அது இனரீதியாகவும் இஸ்லாமிய மதக் கோட்பாட்டு ரீதியாகவும் முரண்படுகின்றது.**

# ஆண் – பெண் உறவு எவ்வாறு இருக்க வேண்டும்?

● வாணி



மனிதர்களுக்கிடையே உறவை வளர்ப்பதிலும், பிரிப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது பேச்சு. குறிப்பாக ஆண் பெண் காதல் உறவில் அன்பைப் பெருக்குவது மட்டு மல்ல வெறுப்பை அடர்த்தியாக்குவதும் அதே பேச்சுதான். பேச்சு என்பது உறவுகளுக்குள் அன்பை விதைக்க வேண்டும்.

ஆனால் ஒரு சில குடும்பங்களில் உறவை சிதைக்கிறது. எதற்கெடுத்தாலும் எரிந்து விழுவது, குதர்க்கமாகப் பேசுவது, குத்திக்காட்டுவது, எரிச்சல் வரவழைக்கும் படி பேசுவது என்பது பல தம்பதிகளுக்கு இயல்பான குணமாக இருக்கிறது. அதுவும் ஆணாதிக்க சிந்தனை கொண்ட பல ஆண்களுக்கு, பெண்கள் நம் அடிமைகள் என்கிற நினைப்பு இருப்பதால் பெண்களிடம் கனிவுடனோ, அன்புடனோ பேசுவதே இல்லை.

இத்தகையோரிடம் பெண்களுக்கு பயம் ஏற்படுமே தவிர உன்னதமான அன்பு இருக்கவே முடியாது! பெண்களும் இதற்கு விதி விலக்கு இல்லை. முள் குத்துவது போல் பேசும் பெண்களும் இருக்கத் தான் செய்கிறார்கள். இதயங்கள் பேசிக் கொள்ளாமல் வெறும் உதடுகள் மட்டும் பேசிக் கொண்டால் அதன் விளைவுகள் மோசமாகத்தானே இருக்கும்!

பொதுவாகவே கணவன்-மனைவி இருவரிடையேயான உரையாடல்கள், ஆண்டுகள் செல்லச் செல்லக் குறைகின்றன என்று தான் ஆராய்ச்சி முடிவுகள் சொல்கின்றன. பேச வேண்டிய எல்லாவற்றையுமே முதல் சில ஆண்டுகளிலேயே பேசி முடித்து விடுகிறார்களாம். அதற்குப் பின் பேசுவதற்கு பொதுவாக ஏதுமில்லாமல் போகிறது. குடும்பப் பொறுப்புகள், குழந்தைகள் கடமை, சொத்து வாங்குவது, உறவினர்களுடன் பழகுவது, விழாக்களில் கலந்து கொள்வது, முதலீடுகளில் ஈடுபடுவது என்று நடுத்தரப் பருவத்தில் வாழ்க்கை இயந்திர மயமாகிப் போகிறது.


அதற்குப் பின் வெறும் பாதுகாப்புக்காகவே இணைந்து வாழ்வதாகச் சொல்கிறது அந்த ஆராய்ச்சி முடிவு. சுவாரஸ்யமான உரையாடல்கள் தான் தம்பதியர்களுக்கிடையே நாளுக்கு நாள் உறவைச் செம்மைப்படுத்துகின்றன. வீடு, குடும்பம் இவற்றைத் தவிர பிற உலக நடப்புகளிலும் ஈடுபாடு கொண்டிருந்தால் பேசுவதற்கு எத்தனையோ விஷயங்கள் கிடைக்கும்.

அளவுக்கு மீறின அன்பு தான் எப்போதும் சந்தேகங்களை உருவாக்கும். எனவே சந்தேக விதை உருவாகாமல் தடுப்பது இருவரின் கடமை. அலுவலகத்தில் இருக்கும் நட்பு வட்டாரத்தை ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்வது சிறந்தது. இல்லையென்றால் சாதாரண தொலைபேசி உரையாடல் கூட இருவரின் பிரிவுக்கு காரணமாக அமைந்து விடும்.

புரிதல் என்பது தம்பதியருக்கிடையே இருக்கக்கூடிய மிக முக்கியமான ஒன்று. ஒருவருக்கொருவர் எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும் போது பேச்சின் விபரங்களை சரியாகப் புரிந்து கொண்டாலே பாதி பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடலாம். இன்றைய சூழலில் எதையுமே அரை குறையாகப் புரிந்து கொண்டு விடுவதே பிரிவினைக்குக் காரணமாகிறது.

வாழ்க்கை இப்படித்தான் செல்ல வேண்டுமா? கணவன் மனைவி உறவு என்பது வெறும் கடமை போல் ஏன் குறுகி ஒரு கட்டத்தில் அது முறிந்து விடுகிறது. எனவே மனம்விட்டு பேசுவோம். வீண் மன உளைச்சல்களையும், கண்ணீரையும் தவிர்ப்போம்.

## உருளைக்கிழங்கு போளி



### தேவையான பொருட்கள்:

1. உருளைக்கிழங்கு - 10 (விருப்பப்படி)
2. உளுத்தம்பருப்பு - 1தேக்கரண்டி
3. கடலைப்பருப்பு - 1 தேக்கரண்டி
4. முந்திரி பருப்பு - 10 (விருப்பப்படி)
5. மைதா மாவு - 2 கப்
6. பச்சை மிளகாய் - 2 ( விருப்பப்படி)
7. கடுகு - 1தேக்கரண்டி
8. உப்பு - தேவையான அளவு
9. நல்லெண்ணெய் - தேவையான அளவு
10. மஞ்சள் தூள் - சிறிது
11. மல்லித்தழை - சிறிது
12. கறிவேப்பிலை - சிறிது.

### செய்முறை:

1. உளுத்தம் பருப்பு, கடலைப்பருப்பு இரண்டையும் தனித்தனியாக வறுத்துப் பொடி செய்து வைக்கவும்.
2. ஒரு வாணலியில் எண்ணெய் ஊற்றி நறுக்கிய பச்சை மிளகாய், கருவேப்பிலை, மல்லித்தழை, போட்டு வதக்கவும்.
3. அதனுடன் வேகவைத்து உதிர்த்த உருளைக்கிழங்கு, உப்பு, மஞ்சள் தூள் கலந்து பூரணமாகக் கிளறி இறக்கி வைக்கவும்.
4. மைதா மாவில் உப்புடன் சிறிது எண்ணெய், தண்ணீர் சேர்த்து போளிக்கு பிசைவது போல் பிசைந்து கொள்ளவும்.
5. ஒவ்வொரு உருண்டையையும் எடுத்து அதனை தட்டி நடுவில் பூரணத்தை வைக்கவும்.
6. பிறகு சாதாரண போளி செய்வது போல் தோசைக்கல்லில் போளியைப் போட்டு எண்ணெய் (விரும்பினால் நெய் பயன்படுத்திக் கொள்ளலாம்) ஊற்றி இரண்டு பக்கங்களையும் வேக வைத்து எடுக்கவும்.






## சில அழகுக் குறிப்புகள்

1. முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்க அடிக்கடி எலுமிச்சை சாற்றை தடவி வர வேண்டும். தினமும் இவ்வாறு செய்வதால் முடி வளர்ச்சி குறைந்து முகம் அழகு பெறும்.
2. பருமனாக இருப்பவர்கள் எடையை குறைக்க தினமும் காலையில் ஒரு டம்ளர் வெதுவெதுப்பான வெந்நீரில் ஒரு மூடி எலுமிச்சை பழச்சாற்றை பிழிந்து அதனுடன் அரை ஸ்பூன் தேன் கலந்து சாப்பிட்டால் எடை படிப்படியாக குறையும்.
3. நகங்களை வெட்டும் முன் நகத்தில் எண்ணெயை தடவிவிட்டு, சிறிது நேரம் கழித்து நகத்தை வெட்டினால், விரும்பும் வடிவத்திலும், அழகாகவும் வெட்ட இயலும்.

# அய்லானும் ஆயிரம் குழந்தைகளும்

**- ஆதங்கன்**





அய்லான்.

உலகம் எங்கும் இந்தக் குழந்தையை இப்போது எல்லோருக்கும் தெரியும். ஆனால் துரதிர்ஷ்டம், தன் பெயரை உலகிலுள்ள உதடுகள் உச்சரிக்கும் தருணத்தில் அந்தக் குழந்தை உயிரோடு இல்லை. உலகுக்கு அந்தக் குழந்தை அறிமுகமானதே உயிரற்ற உடலாகத்தான்.

ஆராவரித்தபடி இருக்கும் துருக்கிக் கடலோரத்தில், சிவப்பு நிற ரீ-சேர்ட்டுடனும், நீல நிறக் காற்சட்டையுடனும் ஒருக்களித்த நிலையில் குப்புறக் கிடந்த பாலகன் அய்ஸானின் சடலம், புகைப்படமாக ஊடகங்களில் வெளியான போது, அரசியல் தஞ்சக் கோரிக்கையாளர்களுக்கு கதவடைப்புச் செய்த நாடுகளின் கன்னங்களில் பளார், பளார்' என்று கண்ணுக்குத் தெரியாத கரம் ஒன்று ஓங்கி அறைந்தது.

அந்தக் குழந்தைக்கு என்ன நடந்தது?

சிரியப் போர் நாளுக்கு நாள் தன் கொடும் நாக்குகளால் உயிர்களைக் காவு கொண்டு வருகின்றது. அதிலிருந்து தப்பிப்பதற்காக ஏராளமான சிரிய மக்கள் உயிரைக் கையில் பிடித்தபடி வேறு நாடுகளுக்கு அகதிகளாக ஓடத் தொடங்கினர். ஆனால் சிரிய அகதிகளை சட்டபூர்வமான உள்நுழைவை பல நாடுகளும் தடை செய்திருந்தன.

இதனால் அவர்கள் கள்ளத் தோணிகளா' சட்டவிரோதமாகக் கடல்மார்க்கப் பயணங்கள் மூலமே சிரியாவில் இருந்து வெளியேறி, வேறு நாடுகளில் கால் பதிக்க முடிந்தது. இப்படியான நிலையில்தால் சிரியாவின் 3 வயதுக் குழந்தையான அய்லானும், சகோதரனும் தம் தாய் தந்தையோடு படகொன்றில் பயணத்தை தொடங்கினர்.

பேரலைகள் நடுவே சிறு படகு எப்படித் தாக்குப் பிடிக்கும்? படகுக்கும் அலைக்குமான பெரும் போராட்டத்தில் கடைசியில் அலை வென்றது. படகைத் தின்றது.

அடுத்த நாட் காலை துருக்கிக் கடலோரத்தில் பாலகன் அய்லான், சிவப்பு மேலங்கி, நீலக் காற் சட்டை சகிதம் அமைதியாக மீளாத்துயில் கொண்டபடி கரையொதுங்கினான். கடலில் சிதைந்த படகுப் பயணிகளின் சடலங்கள் கரையொதுங்கிய தகவல் கிடைக்க ஊடகவியலாளர் கள் விரைந்தனர். கமெராக்கள் அய்லானை விழுங்கிக் கொண்டு, அவனின் மீளாத்துயிலை உலகுக்கு அறிவித்தன.

ஏதுமறியாப் பச்சிளம் பாலகன் தொட்டிலில் துயில்வது போன்று, கடலோரத்தில் பிணமாகக் கிடந்த காட்சி உலகின் இதயத்தை குலுங்கச் செய்தது.

பேஸ்புக், டுவிட்டர், வட்ஸ் அப் என்று சமூக வலைத்தளங் களில் அய்லானின் புகைப்படம் தொடர்ச்சியாகப் பரம்பலாக, அதிர்வின் வீரியம் கூடிக் கொண்டே சென்றது. வெறுமனே அய்லானின் புகைப்படத்தைப் பார்த்து விட்டு, அகதிகளுக்கு இடம் கொடாத நாடுகளை வாய்க்குள் சபித்து விட்டு, தத்தம் வேலைகளைப் பார்க்கச் செல்லா மல், பலரையும் செயலில் இறங்கச் செய்யுமளவுக்கு அய்லானின் ஒற்றைப் புகைப்படம் ஏற்படுத் திய அதிர்வின் இருந்தது. எந்தெந்த நாடுகளெல்லாம் சிரிய அகதி களின் உள்வரவைத் தடுக்கும் நோக்குடன் எல்லைக் கதவுகளை யும், இதயக் கதவுகளையும் இறுகச் சாத்தினவோ அந்த நாடுகளின் அரசுகளுக்கு எதிரான கோஷங்களோடு பெருமளவா னோர் வீதிகளில் இறங்கினர். கைகளில் அய்லானின் ஒற்றைப் புகைப்படத்தையும், கண்ணில் வழியும் இரட்டை விழிநீர்க் கோடுகளோடும் அகதிகளுக்கான போரடியவர்களின் ஆன்மபலம், இரும்புக் கோட்டைக்குள் இருந்த ஐரோப்பிய நாடுகள் பலவற்றின துும் இதயங்களை அசைத்தன. சட்ட திட்டங்கள் தூக்கியெறியப் பட்டு, மனிதத்துக்கு மதிப்பளிக் கப்பட்டது. சிரிய அகதிகளை நிபந்தனையின்றி ஏற்றுக்கொள்ள ஐரோப்பிய நாடுகள் பலவும் முன் வந்தன.

இப்போது சிரிய அகதி களுக்கான இடம் பெயர்தலின் முக்கிய பிரச்சினை ஒன்று தீர்க்கப்பட்டு விட்டது.

முன்னரெல்லாம் சிரியாவை விட்டு வெளியேறினாலும் எங்கு போவது என்ற கலக்கம் அந்த மக்களுக்கு இருந்தது.

ஏனெனில் உயிரைப் பணயம் வைத்து அவர்கள் வேறு நாடுகளின் கரைகளை அடைந்தாலும், அப்படியே வந்த வழியே சிரியர்களைத் திருப்பி அனுப்புவதையே பல நாடுகளும் மரபாகக் கொண்டிருந்தன. இப்போது அப்படியல்ல.

சிரியாவை விட்டு வெளியேறி பாதுகாப்பாக இன்னொரு நாட்டை அடைந்துவிட்டால் போதும். அவர்களுக்கு அகதி அந்தஸ்தும், அடிப்படை வசதிகளும் ஐரோப்பிய நாடுகளில் கண்டிப்பாகக் கிடைக்கும் நிலை உருவாகி விட்டது.

இந்தத் தலைகீழ் மாற்றத்துக்கு காரணம், அய்லானின் மனதைக் கலங்க வைக்கும் அந்த ஒற்றைப் புகைப்படம் தான்.

தன் உயிரைக் கொடுத்து சிரிய மக்களின் வாழ்வில் சிறு வெளிச் சத்தை உண்டுபண்ணிச் சென்று விட்டான் அந்தப் பாலகன்.

அய்லானின் ஒரேயொரு புகைப்படம், உலகை ஒழுங்கையே தலைகீழாக மாற்றி, மனிதம் பற்றிய நம்பிக்கையை விதைத்தமை பற்றி அறியும் தருணங்களில் எல்லாம் ஏனோ முள்ளிவாய்க்கால் நினைவுகள் ஈழத்தமிழர்களின் மனங்களில் எட்டிப் பார்க்கத் தவறவில்லை. ஏனெனில் அய்லானின் சடலத்தை விடவும் கோரமாகக் கொல்லப்பட்ட குழந்தைகளின் கதைகள் கண்முன்னே நிகழ்ந்திருக்கிறது. தலை சிதைந்து, அவயவங்கள் உருக்குலைந்து அடையாளமே தெரிய முடியாதபடி இறுதிப்போரின் போது படையினரால்



கொல்லப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டும். இறுதிப்போரில் மட்டுமல்லாது ஈழத்தில் போர் மேகம் சூழ்ந்த பின்னரான

(22ஆம் பக்கம் பார்க்க)

# விடை தெரியா மர்மங்கள்



**வி**டை தெரியாத விஷயங்கள் இந்த பிரபஞ்சம் முழுவதும் கொட்டிக் கிடக்கிறன. மனிதர்கள் இப்பூமியில் வாழ்ந்ததற்கான அளவுகோலாக ராமர், யேசு, முகமது நபி, புத்தர் காலங்களை வைத்தே கணக்கிட்டு வருகிறோம். அதனால்தானோ என்னவோ, நம் எண்ணங்கள் குறைந்தபட்சம் 2500 லிருந்து 3000 ஆண்டுகளுக்கு மனிதர்கள் வாழ்ந்திருப்பார்களா என்ற உண்மையை நம்ப மறுக்கிறது. அப்படி நம்பினாலும் அதை ஏதோ கட்டுக்கதையாகவோ, ஒரு அமானுஷ்யமாகவோதான் பார்க்கத் தோன்றுகிறது.

பல இலட்சம் ஆண்டுகளாக இந்த பூமி சுழன்று கொண்டு இருக்கிறது. இன்று மனிதர்கள் வாழும் அமைப்பாக இருக்கும் நகரங்கள் அனைத்தும் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் கடல் பரப்பாகவும், நதியாகவும் இருந்திருக்கிறது. பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன் பெரிய நகரங்களாக இருந்த பரப்பு இன்று கடல் பரப்பாகவும் மாறி இருக்கிறது. பூமி வரைபடத்தை மாற்றி எழுதும் ஆழிப் பேரலையான சுனாமி பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து வந்துகொண்டுதான் இருந்திருக்கிறது. அந்த அலைகள் மூலம் கண்டம் விட்டு கண்டம் கூட மனிதர்கள் தூக்கி எறியப்பட்டிருக்கிறார்கள். அதனால்தான் ஒரு கண்டத்தில் இருக்கும் மனிதர்கள் குட்டையாகவும், மற்றொரு கண்டத்தில் இருக்கும் மனிதர்கள் நெட்டையாகவும் இருக்கிறார்கள் என்று கூட ஆராய்ச்சிகள் கூறுகிறது.

விஞ்ஞானம் ஆராய்ச்சிகளை நம்புபவர்கள்தானே நாம். அப்படியென்றால் மேற்சொன்ன விஷயங்களையும் நம்பித்தான் ஆக வேண்டும். இனி சொல்லப் போகும் விஷயங்களையும் நம்பித்தான் ஆக வேண்டும்.

இந்தோனேஷியக் கடல் பகுதியில் அமைந்திருக்கும் புளோரஸ் எரிமலைத் தீவில் கூட 35 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் 3 அடியில் மனிதர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்களை இப்போது ஆராய்ச்சிகள் கண்டுபிடித்து கூறியிருக்கின்றன.

இந்தோனேஷியா கிழக்குப் பகுதியில் புளோரஸ் என்ற ஒரு தீவு. இந்த தீவு மலைகளும் காடுகளும் எரிமலைகளும் நிறைந்த ஒன்று. இங்குள்ள கிராமத்தில் வயது முதிர்ந்த பெரியவர்தான் நெல்லிஸ் குயா. இவர் தன் சந்ததிகளுக்கு தனது மூதாதையர்கள் கூறியதாய் சொன்ன விசித்திர கதை இதுதான்.

புளோரஸ் மலைகளுக்குப் பின்னால் விசித்திர குள்ளர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கண்கள் பெரிதாகவும் உடல் முழுவதும் ரோமம் மூடியும், மற்றவர்கள் புரியாத மொழியும் பேசுவார்கள். இவர்கள் கிராமத்திற்குள் அடிக்கடி புகுந்து, பயிர்கள், உணவுப் பொருள்கள், பழங்களை திருடிக்கொண்டு ஓடிவிடுவார்கள். எப்போதும் சாப்பிட்டுக்கொண்டே இருப்பார்கள். இந்தக் குள்ளர்களை எபுகோகோ என்று அழைப்பார்கள் என்றும் கதை சொல்வார். இது போன்ற கதை இந்தோனேஷியா கிராமங்களில் ஏராளமாய் உண்டு என்பதால் ஆய்வாளர்கள் இக்கதைகளை கற்பனை என ஒதுக்கித் தள்ளினர். ஆனால் 2003ம் ஆண்டு புளோரஸ் தீவில் நெல்லிஸ் குயா வாழ்ந்த கிராமத்திலிருந்து 75 மைல் தொலைவில் ஒரு குகையில் கண்டெடுக்கப்பட்ட ஒரு எலும்புக்கூடு, மேற்கண்ட கதைகள் கற்பனையல்ல உண்மைதான் என அறிவித்து உலகத்தை வியக்க வைத்தது.

> **இந்தோனேஷியக் கடல் பகுதியில் அமைந்திருக்கும் புளோரஸ் எரிமலைத் தீவில் கூட 35 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் 3 அடியில் மனிதர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்களை இப்போது ஆராய்ச்சிகள் கண்டுபிடித்து கூறியிருக்கின்றன.**

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா தொல் பொருள் ஆய்வுக் குழுவினர் டாக்டர் ரிச்சர்ட் ராபர்ட் தலைமையில் இவ் எலும்புக் கூட்டுடன் பல மிருகங்களின் எலும்புகளையும் 19 அடி ஆழத்தில் கண்டு பிடித்தனர். முதலில் இந்த எலும்புக் கூடு ஒரு சிறிய குழந்தையின் எலும்பாக இருக்கும் என்று நம்பினர். ஏனெனில் மொத்த உயரமே மூன்று அடிதான். இறுதியில் விரிவாக ஆராய்ந்த பொழுது, இது வரை யாரும் அறியாத புதிய மானிட இனம் என்பதை அறிந்தனர். கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடு சுமார் 30 வயதுடைய பெண்ணின் எலும்பு.

இவர்களின் மொத்த உயரமே சராசரி 3 அடிதான். அதாவது 3 வயது குழந்தையின் உயரம்தான். இவர்களின் மொத்த உடல் எடை 25 கிலோதான். மூளை அமைப்பு மிகச்சிறியதாகவும் சிக்கல் நிரம்பியதாகவும் இருந்திருக்கிறது.

இக்கண்டு பிடிப்பின் மூலம் மனித பரிணாம வளர்ச்சி கொள்கை தலைகீழாக புரண்டு விட்டது. பெரிய மூளையுடைய மனிதர்கள் மட்டுமே நுட்பமான அறிவு நிறம்பியவர்கள் என்ற கருத்துக்கு மாறாக சிறிய அளவுள்ள மூளையை உடைய இந்த சித்திரக்குள்ளர்கள் வேட்டையாடுதல் வேட்டை கருவிகளை கூர்மையாக உருவாக்கும் நுட்பம் அறிந்தவர்கள் என்று ஆய்வு கூறுகிறது. இந்த 3 அடி பெண் எலும்புக்கூடு சுமார் 18 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருக்க வேண்டும் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

இது பற்றி டாக்டர் ரிச்சட் ராபர்ட் கூறும் பொழுது மானிட வரலாற்றில் 18 ஆயிரம் என்பது சமீபமாக ஒன்று. இந்த புதிய இன குள்ள மனிதர்கள் இன்றும் கூட அடர்த்தியான காடுகளில் வாழ்ந்து வருவதற்கான வாய்ப்பு உள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்னும் விரிவாக ஆய்வு நடத்தினால் இப்புதிய இனத்தைப் பற்றி மேலும் அறியலாம் என்று கூறும் அதே சமயத்தில், புளோரஸ் தீவு நாலாயிரம் அடி ஆழமுள்ள கடல் பகுதியில் அமைந்திருக்கிறன. முக்கியமாக பாலி தீவில் இருந்து லம்போக் தீவு, முப்பது கிலோ மீட்டர் தொலைவில் அமைந்திருக்கிறது. மேலும் இந்த இரண்டு தீவுகளுக்கும் இடையே சேப் என்று அழைக்கப்படும் ஆபத்தான கடல் நீரோட்டமும் ஓடுகிறது. எனவே பாய் மரக் கப்பல் அல்லது இயந்திரப் படகு மூலமாகவே இக்கடல் பகுதியை கடக்க முடியும். எனவே கற்கால மனிதர்கள் எப்படி இந்த ஆபத்தான கடல் பகுதியைக் கடந்து புளோரஸ், திமோர் ஆகிய தீவுகளுக்கும் ஆஸ்திரேலியக் கண்டத்திற்கும் சென்றார்கள் என்பது குறித்து ஆராய்ச்சியாளர்களுக்கு இடையே குழப்பம் நீடிக்கிறது.

ஆனால், அறுநூறு அடி ஆழமுள்ள கடல் பகுதியால் பிரிக்கப்பட்டிருக்கும் இந்தியாவிலும் இலங்கையிலும் கூட கற்கால மனிதர்களின் எலும்புகளும், கற்கருவிகளும்

(22ஆம் பக்கம் பார்க்க)

- ஆசாத்



# ஒரு பெண்ணின் நாடாளுமன்றப் பிரவேசம்



தேசியப் பட்டியல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா நியமிக்கப்பட்டுள்ளார். சில வாக்குகளாலேயே அவர் தேர்தலில் தெரிவுசெய்யப்பட முடியாத நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரேயொரு பெண் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டமை வரவேற்கக் கூடிய ஓர் விடயமாகும்.

இவர் ஒரு ஓய்வு ... அரச அதிகாரி என்ற வகையில் ஒரு நாடாளுன்ற உறுப்பினருக்குரிய ஆளுமை இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டாலும் அதற்கும் அப்பால் அவருக்குச் சிறப்புத் தகுதிகள் உண்டு. இவர் போர்ப் பிரதேசத்தில் வாழ்ந்தவர் என்பதுடன் போரின் சகல வித மான நெருக்கடிகளை அனுபவித்தவாறே பணியாற்றியதுடன் எறிகணை வீச்சில் ஒரு காலை இழந்திருந்தார்.

இவர் போர்ப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்களின் பிரச்சினைகளை குறிப்பாக பாதிக்கப்பட்ட பெண்களினதும், உடல் உறுப்புக்களை இழந்தவர்களினதும் தேவைகளையும் உணர்வுகளையும் ஏனையவர்களை விட உணர்வு பூர்வமாக விளங்கிக் கொண்டு செயற்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவர் நாடாளுமன்ற உறுப்பினரானதை அடுத்து அவருக்கு வழங்கப்பட்ட ஒரு வரவேற்பு நிகழ்வில் ஆற்றிய உரை கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதாகும். அவர் தான் அரச பணியாளராக இருந்தபோது பாவனையில் இல்லாத காணிகளைப் பயன்படுத்தல் எனக் கடிதம் வருமெனவும், அதைத்தொடர்ந்து அங்குள்ள பெரும் மரங்களை வெட்டி 'டிப்பர்' வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சென்று விடுவார்கள் எனவும் தெரிவித்தார். அதாவது எமது மக்களின் அடிவருடிகளாலும் அழிக்கப்படுவது தொடர்பாக அவர் கொண்டிருந்த தார்மீகக் கோபத்தின் வெளிப்பாடு அது.

அவரின் இந்தக் கருத்தானது அவர் மனப்பூர்வமாக எமது மண்ணிலும் மக்களிலும் பற்று வைத்து மக்களுக்குப் பணியாற்றுவதற்கான முன்னறிவிப்பென்றே கருத முடிகிறது. மேலும் அவர் அதே நிகழ்வில் தேர்தல் காலத்தின் போது தனது வெற்றியைத் தடுக்க தனது கட்சியைச் சேர்ந்த சக வேட்பாளர்களே நெருக்கடிகள் கொடுத்ததைப் பற்றியும் சுட்டிக் காட்டத் தவறவில்லை. புதியவர்களைத் தலையெடுக்க விடாமல் செய்யும் பாரம்பரிய கழுத்தறுப்பு அரசியலையும் அவர் புரிந்து கொண்டு அதற்கும் முகம் கொடுத்து முன் செல்லத் தயாராகி விட்டார் என்பதையும் விளங்கிக் கொள்ள முடிகிறது.

எவ்வளவு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்த போதிலும் அவர் ஒரு பெண் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் பெண்கள் பிரச்சினைகளில் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டிய கடப்பாடு அவருக்குண்டு.

இந்தக் காலம் வரைப் பெண்களின் பிரச்சினை இரு தரப்பினரால் இரு விதமாகக் கையாளப் பட்டன. பெண்ணிலை வாதிகள் பெண்களின் பிரச்சினைகளை ஆண்களுக்கெதிரான ஒரு விடயமாகவே பார்த்தனர். குறிப்பாக குடும்ப வன்முறையே ஒரு பெண் எதிர்நோக்கும் பிரச்சினையாகப் பார்க்கப்பட்டது. அவை கூட அறிக்கைகள், பிரசாரங்கள் என்றளவிலேயே மட்டுப்படுத்தப்பட்டன.

அடுத்தது ஆண்களின் பார்வையால் பெண்களின் பிரச்சினை அணுகப்படல். அதாவது பெண்களின் வாழ்வாதாரம், பாதுகாப்பு என்பன தொடர்பான பார்வை. கோழிகளை ஆடுகளை வழங்குவதன் மூலமாகவோ அல்லது ஒரு தையல் இயந்திரத்தை வழங்குவதன் மூலமாவோ பெண்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என நம்பப்பட்டது.

இவை இரண்டுமே மேலோட்டமான பார்வைகளில் எழுபவை தான். ஒன்று நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த பெண்களின் பார்வையிலும், மற்றது அனுதாபம் கொண்ட பார்வையிலும் எழுபவை தான். அடிப்படையில் இவை கூட ஆணாதிக்க நிகழ்ச்சி நிரலில் தொடங்கி வடிவங்களை மாற்றிக் கொண்டு வளர வருபவை.

திருமதி சாந்தி போரின் அவலங்களை அனுபவித்தவர் என்ற வகையிலும், அவற்றால் மக்கள் பட்ட துயரங்களையும் கண்ணால் கண்டவர் என்ற வகையிலும் சாவுகளும், அங்கவீனங்களும் நிறைந்த பகுதியில் வாழ்ந்தவர் என்ற வகையிலும் அவரால் மேலோட்டமான பார்வைகளிலிருந்து விடுபட்டு பிரச்சினைகளை ஆழமாக நோக்க முடியும்.

எமது பெண்கள் இரு விதமான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். கணவனை இழந்த பெண்கள், கணவனோ, சகோதரனோ காணாமல் போய் விட்ட நிலையில் அவர்களின் நிலையறியாது தவிக்கும் பெண்கள், பெற்றோரை இழந்த பெண்கள் என ஒரு பகுதியினர்எதிர் கொண்ட பாதிப்புக்கள், அடுத்த பிரச்சினை போர் காரணமாக தமது வாழ்வாதாரங்களை இழந்து வறுமையில் வாடும் பெண்கள்.

இவர்களின் பிரச்சினைகளை அவர்களுக்கு வெளியே நின்று கருணை உள்ளத்துடன் நோக்குவது கூட ஆணாதிக்கப் பார்வையின் ஒரு வடிவமே. எனவே இவர்கள் முதலில் அமைப்புக்களாகக் கட்டியமைக்கப்பட்டு ஒரு பொது அமைப்பின் கீழ் ஒன்றிணைக்கப்பட வேண்டும் அவர்கள் தாமாகவே தங்கள் தேவைகளை இனம் கண்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகளை இனம் காண வேண்டும். அவர்களின் இயல்பான ஆற்றல் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

அந்தப் பணிகளில் அவர்களுக்குத் தலைமை தாங்குவது நாடாளுமன்ற உறுப்பினரின் கடையாகும். அவர்களின் நடவடிக்கைகளுக்கான அரசியல், சமூக பங்களிப்பை வழங்குவது, பொருளாதார வளங்களை திரட்டுவது போன்ற நடவடிக்கைகளிலும் அவர்களின் நடவடிக்கைகளை கட்டுக் கோப்பான பயனுள்ள வகையில் முன்னெடுப்பதில் வழிகாட்டும் பொறுப்பும் நாடாளுமன்ற உறுப்பினருக்கு உண்டு.

இது மிகவும் சிரமம் வாய்ந்த ஒரு பணியும் பல வித இடையூறுகளுக்கு முகம் கொடுத்து முன்னேற வேண்டிய பணியுமாகும். ஆனால் இந்தப் பணி முன்னெடுத்துச் செல்லப்படும் போது இது ஒரு மாபெரும் பெண்கள் சக்தியாகத் திரண்டெழுந்து அவர்களுக்கு ஒரு சமூக வலிமையை உருவாக்கும் என்பதை எவரும் மறுத்து விட முடியாது.

இந்தப் பணியில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டி வரும் என்பது மறுப்பதற்கில்லை. காணாமல் போனோர் விவகாரத்தில் காத்திரமான பங்கை வகித்தவர்களும், பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டவர்களுமான அனந்தி சசிதரன், ஜெயக்குமாரி போன்றவர்கள் பல வித இன்னல்களுக்கும், புறமொதுக்கல்களுக்கும் உட்படுத்தப்பட்டு இன்று அவர்கள் செயலிழந்து போயிருப்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனினும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பலத்துடனும், நிறுவனமயப்படுத்தப்பட்ட பெண்களின் சக்தியுடனும் முன் செல்ல வேண்டும்.

எனவே சாந்தி சிறிஸ்கந்தராஜா ஒரு பெரு நெருப்பாய் மேலெழுந்து பெண்களுக்குத் தலைமையேற்க, முன் செல்ல வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

***

**எவ்வளவு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்த போதிலும் அவர் ஒரு பெண் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் பெண்கள் பிரச்சினை களில் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டிய கடப்பாடு அவருக்குண்டு.**

# நிஜ வாழ்விலும் நாயகி தான்



அடிக்கடி ஏதாவது சொல்லி மாட்டிக் கொள்ளும் நடிகைகள், மத்தியில் லட்சுமி மேனன் காலெடுத்து வைக்கின்றார் என்றே கூறவேண்டும். சமீபத்தில் திருமணம் பற்றிக் கேட்ட போது, தாகத்துக்குத் தண்ணீர், பசிக்கு சாப்பாடு மாதிரி திருமணமும் வாழ்க்கைக்கு கட்டாயம் என்று நான் கருதவில்லை. ஒருவனுக்கு ஒருத்தி என்பதிலும் எனக்கு சுத்தமாக நம்பிக்கை இல்லை என்றார்.

அவருக்கு பேச்சும், செயலும் வேறல்ல என்பதை வாழ்ந்தே காட்டுகிறார். அரைக்கோடி ரூபாயை சூட்கேசில் திணித்துக் கொண்டு வரிசையில் தயாரிப்பாளர்கள் இப்போதும் கால்கடுக்க இவரது அனுமதி கேட்டு நிற்கிறார்கள்.

அவரோ ஆட்டோவில் கல்லூரிக்கு விரைந்து கொண்டிருக்கிறார். இத்தனை இளம் வயதிலேயே எது ஒன்று குறித்தும் தீர்க்கமான பார்வை, நேருக்கு நேராக உண்மையை மட்டுமே பேசுவது, பேசுவதைப் போலவே நடந்து கொள்வது என்ற சினிமாவில் மட்டுமின்றி நிஜவாழ்விலும் நாயகியாக வலம் வருகிறார்.

# சன்னி லியோனின் ட்விட்டருக்குப் பதிலடி

திரையுலகின் கவர்ச்சி கன்
லியோன். இவர் சமீபத்தில் ஒ
நடித்திருந்தது அனைவரும் அ
இதைக்கண்டித்து ஒரு அரசி
ஆபசமான ஆணுறை விளம்ப
அதிகமாகின்றது என கூறியு
இதற்கு சன்னி லியோன் தன்
பதிலடி...

நாய்கள் கொலை: கேரள மு
சோனாக்சுஷி சின்ஹா

திரைப்பட நடிகை சோனாக்
பக்கத்தில் கேரள முதலைமச்
ஒன்றைப் போட்டுள்ளார்.

அதில் கேரளாவில் தெரு நா
தடுக்க வேண்டும் என கேரள
கொடுத்துள்ள டுவிட்டில் இந்
செய்து நிறுத்துமாறு கேட்டுக்
இதைச் செய்ய வேண்டும் எ

மேலும் சோனாக்சி சின்ஹா
என அனைவரும் உம்மன் ச
விஷயத்தைப் பரப்ப வேண்டு
போல் நடிகர் விஷால் சில ந
கொலைக்கு எதிராக போராட்

கேரளாவில் தெருக்களில் உ
இடையூறாக இருக்கின்றன
கொலை செய்து வருகிறார்
முழுவதும் போராட்டங்கள்,
வருகின்றன. இதற்கு விஷா
சினிமா பிரபலங்களும் குரல்



# திமிர் பிடித்த பெண்...

தமிழ் சினிமாவில் திமிர் பிடித்த பெண்ணாக கருதப்பட்டவர் ஐஸ்வர்யா ராஜேஷ். காக்கா முட்டை அவருக்கு நல்ல மதிப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. இதன் காரணமாக கணிசமான படங்களைக் கைப்பற்றியிருக்கிறார். குடும்பமே சினிமா பாரம்பரியம்தான். தெலுங்கு சினிமா குடும்பத்தில் பிறந்து தமிழில் கலக்கிக் கொண்டிருக்கிறார் ஐஸ்வர்யா.

என் தாத்தா அமர்நாத், தெலுங்குப் படங்களில் நடித்தவர். அத்தை ஸ்ரீலட்சுமி, அங்கே நகைச்சுவைப் பாத்திரங்களில் கலக்கியவர். அப்பா ராஜேஷ், திரையுலகில் ஐம்பது படங்களுக்கும் மேலாக நாயகனாக நடித்தவர். என் நாடி, நரம்பு, இரத்தம் முழுவதும் சினிமா ஊறியிருக்கிறது.

ஆனால், சினிமா குடும்பத்தில் இருந்து வந்ததால் மட்டுமே யாருக்கும் நடிப்பு இயல்பாக வந்து விடாது. இந்த மாதிரி குடும்பத்தில் பிறப்பது விசிட்டிங் கார்டு மாதிரி. தனித்துவமான திறமை இருந்தால் மட்டுமே சினிமாவில் ஜெயிக்க முடியும் என்கிறார்.நிறைய படங்களில் நதயகனாக நடித்து வருகிறேன்.

திடீரென்று ஒரு பாடலுக்கு ஆடினால், மதிப்புக் கெட்டுவிடும். ஆனால் முன்னணி நடிகர்களின் படங்களில் வாய்ப்புக் கிடைத்தால், கண்ணை மூடிக்கொண்டு ஆடுவேன் என்கிறார்.



# சீரியலுக்கு வருகிறாரா டிடி ?

விஜய் டிவியின் நிகழ்ச்சித் தொகுப்பாளினி திவ்ய தர்ஷினி சமீப காலமாக டிவி நிகழ்ச்சிகளில் தென்படுவதில்லை. மீண்டும் இவர் டிவிக்கு வருவாரா என்றால் அதற்கு பதில் கிடைக்காத நிலையில் தற்போது புதிய தகவல் ஒன்று கிடைத்துள்ளது.

பலரும் டிடியை டிவி சீரியலில் நடிக்கச் சொல்லி அணுக அதற்கு கொஞ்சம் பொருங்கள் நான் நேரம், வரும்போது சொல்கிறேன் என சொல்லியுள்ளாராம். மேலும் இவரின் மீடியா பயணமே டிவி சீரியலில் தான் துவங்கியது என்பது நாமறிந்ததே. இந்நிலையில் டிடி மீண்டும் சீரியலுக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் விஜய் டிவியின் செல்லம் என இப்போதும் சில விளம்பரங்கள் வரும் நிலையில் விஜய் டிவியின் சீரியலிலேயே டிடி நடிப்பாரா அல்லது வேறு சேனலின் சீரியலா எனக் கேள்விகள் எழுந்துள்ளன.




தனி ஒருவ
மற்றும் அர
விதமான ப
லையில் இ
பெயரை ம
வருடங்கள

பலரும் ப
பாராட்டுக
இயக்குநர்
படம் குறித்
தெரிவித்து
வாழ்த்துகள்
நிர்பந்தப்ப
கட்டிப்போ

உங்கள் ப
கொடுத்தி
யை வெளி
மேனன் ட

ர்ச்சி கன்னியாக வலம் வருபவர் சன்னி
பத்தில் ஒரு ஆணுறை விளம்பரத்தில்
னவரும் அறிந்ததே.
ஒரு அரசியல் பிரமுகர் இதுபோன்று
ற விளம்பரத்தால் தான் நாட்டில் கற்பழிப்பு
ன கூறியுள்ளார்.
யோன் தன் டுவிட்டர் பக்கத்தில் கொடுத்துள்ள

கேரள முதலமைச்சருக்கு கோரிக்கை வைத்த
றா
சோனாக்சுஷி சின்ஹா தனது டுவிட்டர்
தலைமைச்சர் உம்மன் சாண்டிக்கு டுவிட்டர்
ளார்.
தெரு நாய்களை கொலை செய்வதைத்
ன கேரள முதலமைச்சருக்கு அவர்
ட்டில் இந்த மனிதநேயமற்ற செயலை தயவு
கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் கண்டிப்பாக
ண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.
சின்ஹாவின் நண்பர்கள் மற்றும் ரசிகர்கள்
ம்மன் சாண்டியை டுவிட்டரில் இணைத்து
வேண்டும் எனக் கேட்டு வருகிறார்கள். இதே
ல் சில நாள்களுக்கு முன்பு இந்த நாய்கள்
போராட்டம் நடத்தியது குறிப்பிடத்தக்கது.
களில் உள்ள நாய்கள் மனிதர்களுக்கு
ின்றன என அவைகளை கொடூரமாக
ருகிறார்கள். இதனை எதிர்த்து நாடு
ங்கள், சமூக வலைகளில் எதிர்ப்புகள் நடந்து
த விஷால் சோனாக்சுஷி சின்ஹா உள்ளிட்ட
ும் குரல் கொடுத்து வருகின்றனர்.



# நடிகரைக் காதலிக்க மாட்டேன்

நடிகரை காதலித்தால் சிக்கல்– வெளிப்படையாகப் பேசும் நடிகை குயின், தனு வெட்ஸ் மனு உள்ளிட்ட படங் களின் வெற்றியினால் உயர்ரக நடிகையாக வலம் வருபவர் கங் கனா ரணாவத். தமிழில் ஜெயம்ரவியுடன் தாம் தூம் படத்தில் நடித்தவர்.

இந்தி நடிகை யாரும் வாங்காத அளவிற்கு கங்கனா தற்பொழுது 11 கோடி ரூபாய் வரைக்கும் சம்பளம் வாங்குவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இதுபற்றி அவரிடம் கேட்டதற்கு, நான் அதிக சம்பளம் வாங்குவதாக விமர் சிக்கப்படுகிறது. ஒரே படத்துக்கு அதிக நாட்கள் நடித்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது. கதையும், கதாநாயகிக்கு முக்கியத்துவம் இருப்பது போன்ற படங்களாக எனக்கு அமைகிறது. எனவே அதற்கேற்ப சம்பளம் வாங்குகிறேன் என்றார்.

மேலும் நீங்கள் யாரையாவது காதலிக்கிறீர்களா என்று கேட்டதற்கு, என் படங்களில் மட்டும் தான் காதல் காட்சிகள் இருக்கும். நிஜ வாழ்க்கையில் இல்லை. இதுவரை நான் யாரையும் காதலிக்கவில்லை.

குறிப்பாக சக நடிகரை காதலிக்க மாட்டேன். ஏனெனில் சினிமா துறையே போட்டி நிறைந்தது. எனவே ஒரே துறையில் காதலித்தால் சரியாக இருக்காது. நடிகர் அல்லாத என் மனம் திருடவிருக்கும் கள்வரை தேடிக் கொண்டிருக்கிறேன்



# தெலுங்கிலும் பிரமாண்ட விழா

சிம்புதேவன் இயக்கதில் விஜய் இரண்டு வேடங்களில் நடிக்க, ஹன்சிகா, ஸ்ருதிஹாசன் நாயகியாக நடித்து ஒக்டோபர் 1ம் திகதி வெளியாக உள்ள படம் புலி. ஸ்ரீதேவி, சுதீப், தம்பி ராமையா, வித்யூலேகா, உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகியுள்ள இந்தப்படத்துக்கு இசை தேவி ஸ்ரீ பிரசாத்.

படத்தின் அறிமுக பதாதைகள் தென்னிந்திய அளவில் அதிகம் பார்க்கப்பட்ட பதாதைகளாக மாறியுள்ளது. மேலும் படத்தில் பாடல்களும் பிரபலமான நிலையில் புலி படத்தின் தெலுங்கு இசை வெளியீட்டு விழா வரும் செப்டம்பர் 10ஆம் திகதி வெளியாக உள்ளது.


ஜில்லா படம் தெலுங்கில் வெற்றி பெற்றதையடுத்து விஜய் கேரளா மட்டுமின்றி தெலுங்கு ரசிகர்களுக்கும் நெருக்கமாகிவிட்டார். மேலும் தேவி ஸ்ரீ பிரசாத் தமிழை விட தெலுங்கில் ஹிட் இசையமைப்பாளர் என்பதால் இந்த இசை வெளியீட்டை கொஞ்சம் பிரம்மாண்டமாக டாப் பிரபலங்கள் சூழ நடத்தவிருக்கிறார்கள்.

ஒருவன் படத்துக்காக இயக்குநர் மோகன் ராஜா
ம் அரவிந்த் சாமி ஆகிய இருவரும் எதிர்பாரா
ான பாராட்டுகளைப் பெற்று வருகிறார்கள். இந்தி
ில் இயக்குநர் மோகன் ராஜா, ரீமேக் ராஜா என்ற
ரை மாற்றவே இந்த சொந்த கதை இரண்டு
ங்களாக உருவாக்கி படமாக்கியதாக கூறினார்.
ும் படம் குறித்து நல்ல விமர்சனங்களையும்,
டுகளையும் தெரிவித்துவரும் நிலையில்
குநர் கௌதம் மேனன் தனது பாராட்டுகளையும்
குறித்த கருத்துகளையும் டுவிட்டரில்
ித்துள்ளார். தனி ஒருவன் படத்திற்காக
துகள் இயக்குநர் ராஜா, பார்வையாளர்களை
தப்படுத்தாமல், கதையுடன் ஒன்றச் செய்து
ப்போட்டுவிட்டீர்கள்.
கள் பாதையில் நீங்கள் ஒரு படம்
த்திருப்பது சிறப்பு.இதற்காக நான் என் மகிழ்ச்சி
வெளிப்படுத்தும் தருணம் இது. என்று கௌதம்
ன் ட்விட்டரில் பதிவு செய்துள்ளார்.



# காதலின் சின்னம் மூளையா இருதயமா?

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்



'குற்றம் செய்தவர் மீண்டும் குற்றம் செய்வாரா?', ஒருவரது அரசியல் சாய்வு எந்தப் பக்கம் இருக்கக் கூடும்' 'ஒரு குறிப்பிட்ட விடயத்தில் ஒருவர் எவ்வாறு முடிவு எடுப்பார்'

இவை பற்றி யாரால் என்ன சொல்ல முடியும்? மற்றவர் மனதில் உள்ளதை எம்மால் எவ்வாறு கண்டறிய முடியும்? அவராகச் சொன்னால்தான் உண்டு. அல்லது கேட்டு அறிய வேண்டும்.

கள ரீதியாக இல்லாமல் விஞ்ஞான பூர்வமாக இந்த விடயங்கள் பற்றி அண்மையில் ஆய்வுகளாக செய்யப்பட்டிருந்தன. அவர்களது சமூக மற்றும் தனி நபர் செயற்பாடுகளைக் அடிப்படையாகக் கொண்டு அல்ல.

மாறாக அவர்களது மூளைகளின் செயற்பாடுகளை நுணுக்கமாக ஆராய்ந்து செய்யப்பட்டவை. அறிய ஆச்சரியமாக இருக்கிறதா?

உணர்வோடு சம்பந்தப்பட்ட விடயங்களை பௌதீகமான மூளைக்குள் ஆய்வது பற்றி சாதாரண மனிதர்கள் மட்டுமின்றி பல அறிஞர்கள் மற்றும் விஞ்ஞானிகளும் ஐயங்களை எழுப்பினர்.

**மனசும் மூளையும்**

அட்டக் கத்தி திரைப்படம் வந்திருக்கிறது.. அற்புதமானது என்று சொல்ல முடியாது. ஆனால் மிக வித்தியாசமானது. காதல் தெய்வீகமானது. உண்மையான காதல் ஒரு முறைதான் வரும், காதல் இல்லையேல் சாவு' போன்ற பிம்பங்களை உடைத்துக் கொண்டு வந்திருக்கும் சினிமா அது.

நாயகன் ஒவ்வொரு முறை காதல் வயப்படும்போதும் அவனது காதலின் அடையாளமாக இருதயத்தை தாங்கிய அம்பு காதலியை நோக்கி சிட்டெனப் பாயும்.

காதல் என்றால் உணர்வுடன் தொடர்புடையது. ஆனால் காதலின் சின்னமாக ஏன் இருதயத்தை வைத்திருக்கிறோம். காதலில் நாம் இழப்பது, பெறுவது, அனுபவிப்பது எல்லாமே உணர்வுகளுடன் தொடர்புடைய மூளையால்தானே?

தர்க்க ரீதியாகச் சிந்தித்தால் மூளைதான் காதலின் சின்னமாக அமைய வேண்டும்.

இந்தச் சிந்தனை முரணுக்குக் காரணம் எம்மிடையே ஆழப் பதிந்திருக்கும் ஒரு எண்ணம்தான்.

ஓர் உதாரணம் பார்க்கலாம். வழமையான தமிழ்த் திரைப்படங்களின் கதைதான். ஒரு அழகான பெண். மிகவும் வசதியுள்ளவள். ஆனால் அவள் காதலிப்பதோ ஒரு விளிம்பு நிலை வாலிபனை. 'தனது மூளை அவனை மறக்கச் சொல்கிறது, மனசோ அவனோடுதான் உறவாடுகிறது' என்பாள்.

ஆம் மூளை வேறு மனசு வேறு என்ற எண்ணம் பலரிடையே ஆழ வேரூன்றிவிட்டது.

ஆனால் மனசு, மூளைக்குள்தான் இருப்பது விஞ்ஞான பூர்வாகத் தெளிவாகப் புரிந்து நீண்ட காலமாகிவிட்டது.

**விஞ்ஞான ஆய்வுகள்**

இருதயத்தையும், சிறுநீரகத்தையும், ஈரலையும் மாற்றீடு செய்யும் சத்திரசிகிச்சைகள் சர்வ சாதாரணமாகிவிட்டன. ஆனால் இன்னமும் மூளையில் கை வைக்க முடியவில்லை. இதனாலோ என்னவோ! உடல் உறுப்புகள் பற்றிய நுண்ணிய ஆய்வுகள் இப்பொழுது மூளையின் பக்கம் திரும்பியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

ஐன்ஸ்டீனின் மூளையின் அளவும் அவரது அறிவாற்றலும் பற்றிய ஆய்வுகள் சில காலத்திற்கு முன் ஊடகங்களில் அடிபட்டது. அது பற்றிய சர்ச்சைகளும் எழுந்தன. சமகாலத்திலும் எழுதப்பட்டது. மூளையின் அளைவை மட்டும் வைத்துக் கொண்டு அதன் ஆற்றலை புரிந்து கொள்ள முடியாது என்றார்கள்.

'கண்ணாடிக் குடுவைக்குள் உள்ள மூளையை ஆய்வதன் மூலம் மூளையின் செயற்பாட்டை கண்டறிய முடியாது' என்ற வாதமும் ஏற்றுக் கொள்ளக் கூடியதே.

உண்மைதான். மூளையானது தனியாக இயங்கும் உறுப்பு அல்ல. அது உடலின் ஒரு அங்கம். உடலுடன் கூடவே நடமாடும் அந்த மூளையானது பல்வேறு அனுபவங்களைப் பெறுகிறது. புதிய மனிதர்களைக் காண்கிறது, புதிய சூழல்களில் இயங்குகிறது. பிரச்சனைகளை எதிர் நோக்குகிறது, ஆபத்துக்களை எதிர் கொள்கிறது.

அதே நேரம் சிரிக்க வைக்கிறது; அழ வைக்கிறது. கோபப்பட்டு ஆக்கிரோஸமாக தன்னைச் சுமக்கும் உடலை எதிர்வினையாற்றவும் வைக்கிறது.

அதன் ஆற்றலை அதன் செயற்பாட்டைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் இன்னும் ஆழமாகச் செல்ல வேண்டும். மூளையின் அடிப்படையான நரம்புக் கலங்களை ஆராய வேண்டும். மூளையில் தகவல்கள் எவ்வாறு பரிமாறப்படுகின்றன என்பது பற்றி அறிய வேண்டும். நினைவுகள் எப்படிச் சேமிக்கப்படுகின்றன என்பது தெளிவாக வேண்டும்.

இவற்றையெல்லாம் தனியாக மூளையை வெளியே அகற்றி போர்மலின் போட்டுப் பாதுகாத்து அதை ஆராய்வதில் பயனில்லை. மூளையானது வெவ்வேறு வித்தியாசமான சூழல்களைச் சந்திக்கும் போது பெறும் மாற்றங்களை ஆராய வேண்டும். மூளையை அவ்வாறு ஆராய்வதை நரம்பியல் விஞ்ஞானம் (Neuroscience) என்கிறார்கள்.

இவை மூளையில் பதிவாகின்றன. ஒவ்வொரு உணர்வும் அனுபவமும் கற்கையும் அங்கு பதிவாகின்றன. இதற்குக் காரணம் அது மிகவும் நுணுக்கமான ஒரு உறுப்பு. 'ஆழ்ந்தகன்ற நுண்ணியனே..' என சிவனைப் பாடினார் மாணிக்கவாசகர். அது போல நுண்ணியதில் நுண்ணியது.

அவ்வாறே அனுபவங்களின்; பதிவுகள், மூளையின் கண்ணுக்கு எட்டா ஏதோ ஒரு பகுதியில், சில மாற்றங்களை ஏற்படுத்துகின்றன அங்கு பேணப்படுகின்றன. பின்னொரு நாளில் நினைவு மீட்கும்போது அவை அச்சடித்த காகிதம்போல தகவலை மீளத் தருகின்றன.

**நவீன ஆய்வுகள்**

இவற்றை ஆராய்வதற்கான வசதிகள் எங்களிடம் உள்ளனவா?

இது சாத்தியமா?

'இருக்கு.. ஆனால் இல்லை..' என்ற பாணியில்தான் மழுப்பலாக பதில் சொல்ல வேண்டியுள்ளதா?

நரம்பியல் விஞ்ஞானம் இப்பொழுதான் குறுநடை போட ஆரம்பித்திருக்கிறது.

MRI பற்றி எல்லோருக்கும் தெரியும். எமது மூளைக்குள் இருக்கும் கட்டிகள், குருதிக் கண்டல்கள், பழுதடைந்த மூளையின் பகுதிகள் போன்றவற்றை புகைப்படம்போல எடுத்துக் காட்டுபவை அவை.

ஆனால் இவை போதுமானதல்ல என்பதை எல்லோரும் அறிவர்.

மூளையின் கனபரிமாணத்திற்கு அப்பால் அதன் செயற்பாட்டை ஆராயும் FMRI (Functiona lmagnetic resonance imaging) பாவனைக்கு 1990 களில் வந்துவிட்டது. ஒரு பகுதி நரம்புகளின் செயற்பாடுகளுக்கும் அதற்கான குருதி ஓட்ட அளவிற்கும் தொடர்பு உள்ளது என்பதை அடிப்படையாகக் கொண்டு படம் எடுக்கிறது இது. அதாவது செயற்படும் மூளையின் குறிப்பிட்ட பகுதிக்கு அதிகளவு இரத்தம் செல்வதைக் கொண்டு இயங்குவது.

இவை ஆரோக்கியமான சாதாரண மனிதர்களின் மூளையை ஆராய்வதில் புரட்சிகரமான முன்னேற்றத்தைக் கொண்டு வந்தது. உணரும்போதும் செயற்படும்போதும் மூளையின் பகுதிகளில் ஏற்படும் மாற்றங்களை பதிவு செய்ய முடிந்தது. எம் நினைவுகளையும், சிந்தனையையும், முடிவு எடுத்தலையும், அறிவாற்றலையும் மட்டுமின்றி கனவுகளையும் கூட உணர்த்தக் கூடியதாகும்.

இது ஒரு ஆரம்ப நிலை உபகரணமாகும்.. புதிய புதிய கருவிகள் வந்துள்ளன. மூளையின் ஆழத்தில் புதைந்திருக்கும் சில நரம்புக் கலங்களை மிகுந்த துலக்கத்துடன் தூண்டும் வல்லமை கொண்ட ஒளித்துகள் கருவிகளை

(18 ஆம் பக்கம் பார்க்க)

# கவிதைப்புனல்



## நினைவுகள்

புயல் ஓய்ந்து
புழுதி அடங்கிய
புதுக்காற்றில்
மௌன மொழிகள்...!

மழை பெய்து
மண் அரித்து
செடி பிடுங்கிய
பாறை நெஞ்சில்
வேர் பதித்த
நினைவுத் தழும்புகள்...!

தீ எரிக்கும்
கழிவுப் பொருள்களில் -
உன்
கவிதை மடல்கள்...!

கரை மோதும்
கடல் அலைகள்
கரைத்துச் செல்லும் -
உன்
காலடித் தடங்கள்...!

- சுசி

## மனிதனாக வாழ்



பொறுமையைக் கடைப்பிடி
பொறாமைக்குத் தடைவிதி
சத்தியம் நிலைத்திட
சகோதரத்துவம் தழைத்திட
அன்பையே விதைத்திடு
வன்முறை தவிர்த்திடு
பொய்மையை விரட்டிடு
வாய்மையை நிலைக்கச்செய்
தீமைகள் விலக்கிடு
நன்மைகள் நிறைத்திடு
பஞ்சமே வந்தாலும்
லஞ்சமே வாங்காதே
வஞ்சத்தை நிறுத்திடு
நெஞ்சத்தை மாற்றிடு
மனிதா வா
மாண்புற வா
மனித நேயம் வளர்
மனிதனாக வாழ்...!

- சரஸ்வதி

## நீர்மேல் எழுத்து



மேடையில் முழங்கிடும்
மேன்மை தரும் சொற்கள்தான்
பாசாங்கு கூட்டத்தினர்
பாதத்தில் மிதிபடும் கற்கள்தான்!


நாவில் உதிர்த்த வார்த்தையது
நாடகம் என்றே ஆகியது
மேடை விட்டு இறங்கியதுமே
மேயும் பசுத்தோல் புலியென்றாகியது!

எட்டி நடக்குமுன்னே
எடுத்துரைத்த சொற்கள் ஓடிடுதே
எழுத்தால் நீர்மேல்
எழுதிடும் கோலமென ஆகிடுதே!

நின்றால் ஒரு பேச்சு
நடந்தால் மறு வீச்சு
நிறுத்து அளக்கும் மூச்சு
நித்திரை விழுங்குவதாய் ஆச்சு!

நம்பினார் கெடுவதில்லை
நான்குமறைத் தீர்ப்பெல்லாம்
நம்பியவரைக் கழுத்தறுக்கும்
நயவஞ்சகர்க்கு வெறும் சொல்லாம்!

- நாகினி



# மனநிலை மூன்று விதம்

ஒரு மனிதனுக்குத் தேவையானது மனவளம். இன்றைக்கு நம்முடைய மனதைத் தூய்மையாக வைத்திருந்தால்தான் பல காரியங்களை நாம் செம்மையாகச் செய்ய முடியும். இந்த மனநிலையை மேல்நிலை, நடுநிலை, கீழ்நிலை என்று மூன்றாகப் பிரிக்கலாம். ஏனென்றால் இந்த மூன்று நிலைகளும் வெவ்வேறான வழியிலே இருக்கின்றன.

ஒருவனுடைய மனதானது எப்போதுமே தெய்வீக சிந்தனையுடையதாக இருக்குமானால், அதுவே மேல்நிலை என்று சொல்லப்படுகிறது. இன்றைக்கு நடக்கும் காரியங்களை வைத்து நம்முடைய மனதை வளப்படுத்திக் கொள்வது நடுநிலை என்று சொல்லப்படுகிறது. எப்பொழுதுமே கீழ்த்தரமான சிந்தனையுடையதாக இருக்குமானால் அதுவே கீழ்நிலை என்று சொல்லப்படுகிறது. இப்படி மூன்று விதமாக மனநிலையைப் பிரித்துக் கொள்ளலாம்.

உதாரணமாக, கீழ்நிலை என்றால் இந்த உலகத்திலே எதைச் சம்பாதிக்கலாம்? அதற்காக என்ன செய்யலாம்? எப்படி செய்யலாம்? என்று இருபத்து நான்கு மணி நேரமும் அந்த எண்ணத்திலேயே தங்கள் வாழ்க்கையைச் செலவிடுவதாகும். இதற்கு ஒரு கதை உண்டு. ஒரு கணவன் மனைவி சன்னியாசம் போக வேண்டுமென்று பட்டணத்தை விட்டு காட்டுக்குச் சென்றார்கள். காட்டுக்குப் போகும் வழியிலே ஒரு வைரக்கல் கீழே கிடந்தது. அதைப் பார்த்த கணவன், இதை என் மனைவி பார்த்தால் வைரக்கல்லுடன் நாம் திரும்பவும் பட்டணத்துக்குச் செல்வோம் என்று சொல்வாள். நம்முடைய சன்னியாசம் என்னாவது என்று நினைத்துக் கொண்டே அந்த வைரக்கல்லை தன்னுடைய காலால் மறைத்துக் கொண்டு நின்றான். இதைக் கண்ட மனைவி, என்ன ஒரே இடத்தில் நின்று கொண்டிருக்கிறீர்கள். நாம் காட்டுக்குள் செல்ல இன்னும் வெகு தூரம் நடக்க வேண்டும் என்றாள்.

அப்பொழுது கணவன் நான் ஒரு வைரக்கல்லைக் கண்டேன். இந்த வைரத்தைப் பார்த்ததும் நீ வைரத்தை எடுத்துக் கொண்டு மீண்டும் பட்டணத்துக்குச் செல்வோம் என்று சொல்லி விடுவாயோ என்கிற பயத்தில் அந்த வைரக்கல்லை மறைத்து, நின்று கொண்டிருக்கிறேன். என்று சொன்னான். அதற்கு மனைவி, உங்களுக்கு கல்லுக்கும், வைரத்துக்கும் வித்தியாசம் தெரிகிறதென்றால் நாம் சன்னியாசம் போவதை விட பட்டணத்துக்கே திரும்பப் போய்விடுவது நல்லது என்றாள். அதன்பிறகு இருவரும் பட்டணத்துக்கே திரும்பினார்களாம். இது எதைக் குறிக்கிறதென்றால் கீழ்நிலையைக் குறிக்கிறது.

சிலர் எப்போது பார்த்தாலும் வெளியே செல்லும் போது, நீ போகும்போது பார்த்துப் போ, கவனமாகப் போ, வாகனங்களில் இடிபடாமல் போ. பஸ்ஸில் ஏறும் போது கீழே விழுந்து விடாமல் பார்த்துக் கொள் என்று ஏதாவது சொல்லிக் கொண்டே இருப்பார்கள். அப்படி நினைக்கிறவர்கள்தான் விழுந்து விடுவார்கள்.

விவிலியத்திலே ஒரு கதை இருக்கிறது. யோபு என்று ஒருவர் இருந்தார். அவர், நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது என்று சொன்னார்.

எனக்குக்கூட அப்படி ஒரு அனுபவம் ஏற்பட்டது. ஒரு முறை பத்திரிகையிலே வெளியான ராசிபலனைப் பார்த்துக் கொண்டிருந்தேன். என்னுடைய ராசிக்கு படிக்கும் போது அந்த மாதத்தில் ஒரு விபத்து உண்டாகும் என்று போட்டிருந்தது. நான் அதே எண்ணத்தில் கார் ஓட்டுவேன். அதில் சொன்னது போலவே ஒரு நாள் சின்ன விபத்து நடந்து விட்டது. பெரிய சேதம் ஏதுமில்லை. அப்பொழுதுதான் நாம் பயந்த காரியம் நடந்து விட்டதே என்று யோசித்தேன். நம்முடைய மனநிலையானது அப்படியிருக்கும் போது அந்தப் பயத்திலேயே நாம் சில காரியங்களைச் செய்து விடுகிறோம். அது மாதிரியான சிந்தனைகளை நம்முடைய மனதை விட்டு அப்புறப்படுத்தி விட வேண்டும்.

நடுநிலை என்றால் இன்றைகுள்ளதைப் பார், நன்றாகச் சாப்பிடு, நன்றாக உடையணிந்து கொள், நாளையைப் பற்றித் தெரியாது என்று சொல்லித் தங்களுக்குக் கிடைத்த பணத்தை எல்லாம் வீணாகச் செலவழிப்பார்கள். அதுவும் ஒருவிதமான மனநிலை.

ஆனால் மேல்நிலை என்று சொல்லும்பொழுது, சிலர் வேதங்களைப் படிப்பார்கள். ஆன்மீகம் மற்றும் நல்வழிப் புத்தகங்களைப் படிப்பார்கள். வரப்போகிற அழிவு பற்றிய சில காரியங்கள் அவர்களுக்குத் தெரியும். அதை மனதில் வைத்து அவர்கள் தங்கள் மனதைப் பக்குவப்படுத்தி மற்றவர்களுக்கு இப்படி செய்யாதே நல்லதையே செய்யுங்கள் என்று புத்திமதி சொல்வார்கள். வேதத்தில் இப்படி சொல்லியிருக்கிறது. நாம் இப்படித்தான் வாழவேண்டும், நம்முடைய மனதை நல்லபடியாக வைத்து வாழவேண்டும் என்று பல அறிவுரைகள் சொன்னவர்கள்தான் இன்று நமக்கு மகான்களாகத் திகழ்கிறார்கள். நாமும் நம்முடைய மனவளத்தைப் பெருக்கிப் பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டும். அதுதான் வாழ்க்கைக்கு நல்லது.




அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் உள்ள பெண்கள் சிறுவர் பிரிவின் மாதாந்த கூட்டத்துக்கு சென்றிருந்தேன். வழமைபோல கூட்டத்தில் சுவாரசியமான விடயங்கள் (பெண்கள் சிறுவர் சம்பந்தப்படாத) பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டது.... அடுத்த கூட்டத்தையும் இதே போல பயனுள்ளதாக(?) இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று உறுதி பூண்டு கூட்டத்தை நிறைவு செய்தனர்.

கூட்டம் முடிந்து, வெளி நோயாளர் பிரிவைத் தாண்டி வெளியே வந்து கொண்டிருந்தேன். கணிசமான அளவு கூட்டம் வெளிநோயாளர் பிரிவில் காத்திருந்தது. கூட வந்த அலுவலக நண்பர் வேறொரு நபரை சந்திக்கச் சென்றபடியால் அவருக்காக நானும் வெளிநோயாளர் பிரிவில் காத்திருந்தேன்.

காத்திருந்தவேளை..... வைத்தியரின் அறையில் நடப்பதை காணமுடிந்தது. கண்ட காட்சியில் சற்றே சுவாரசியம் பிறக்க, உன்னிப்பாக நோக்கினேன். ஒரு அறுபது வயது மதிக்கத்தக்க பெண்மணி, வைத்தியருக்கு என்னத்தையோ நடித்துக் காட்டிக் கொண்டு இருந்தார்.

அவரின் உடல் மொழியால் மருத்துவருக்கு எதையோ அவர் விளங்கப்படுத்த முயல்வது எனக்கு தெரிந்தது.... பாவம் அந்த அம்மணி வாய் பேச முடியாதவர் போல.. எவ்வளவு கடினமாக தனது நோயை மருத்துவருக்கு புரிய வைக்கின்றார் என்று பெருமூச்சை விடத் தொடங்க.......... வந்த பெருமூச்சு பாதியில தங்கி விட்டது. ஏனெனில் இப்பொழுது மருத்துவரும் நடிக்கத் தொடங்கி இருந்தார்.... அட கஷ்டகாலமே மருத்துவருக்கும் அதே வியாதி போல என நினைத்து கவனிக்கத் தொடங்கினேன்.

இரண்டு பேரும் கைப்பாஷை தான்.... திடீரென்று மருத்துவர் எழும்பி தன்ர ரவுசர் பொக்கற்றுக்குள்ள அகழ்வாராய்ச்சி செய்து போனை எடுத்து காதுக்க வச்சு வாயால கதைக்க தொடங்கினார்.

எனக்கு ஆர்வம் தாங்க முடியேல்ல....பிறவி விடுப்புக் குணம் என்னை இருக்க விடேல்ல. வேலை முடிஞ்சு போவமே எண்டு வந்த நண்பரை ஓ.பி.டியில இருக்கச் சொல்லிப்போட்டு எழும்பிப் போய் அறை வாசலில் நின்ற நேர்ஸிடம் விசாரித்தேன்.

உள்ளுக்க என்ன நடக்குது? ஆருக்கு குறைபாடு? எண்டு.

அவ சொன்னா மருத்துவரும் கதைப்பாராம்.... அம்மணியும் கதைப்பாவாம்.... ஆனா மருத்துவர் சீனாவாம் அம்மணி தானாவாம்.. (சீனா எண்டா சிங்களவர், தானா எண்டா தமிழர் எண்ட சங்கேதப் பாஷைக்கு கிட்டத்தட்ட ஐம்பது வயசாகிட்டு)

அப்ப 'தானா' வில மருத்துவர் இல்லையோ என்றேன்.

இருக்கினம்.... ஆனா கொஞ்சப்பேர்

கொஞ்சமெண்டா எத்தனை?

ஆறு

இந்த ஆஸ்பத்திரியில் மொத்தம் எத்தனை மருத்துவர்கள் என்றேன் குழப்பத்துடன்.

முப்பத்துநாலு எண்டா தெளிவா.

அப்ப மிச்சம் இருபத்தெட்டும்...?

சீனா

முப்பத்துநாலு மருத்துவர்களுக்குள்.... இருபத்தெட்டு பேர் தென்னிலங்கையிலிருந்து வந்து முல்லைத்தீவில் தங்கி இருந்து சேவையாற்றுகின்றார்கள்.... நம்மவர்கள் வெறும் ஆறுபேர் தான்.

அதிலும் ஐவர் முல்லைத்தீவையும் ஒருவர் கிளிநொச்சியையும் சொந்த இடமாகக் கொண்டவர்கள்.


“ பாவம் அந்த அம்மணி வாய் பேச முடியாதவர் போல.. எவ்வளவு கடினமாக தனது நோயை மருத்துவருக்கு புரிய வைக்கின்றார் என்று பெருமூச்சை விடத் தொடங்க.......... வந்த பெருமூச்சு பாதியில தங்கி விட்டது. ஏனெண்டா இப்பொழுது மருத்துவரும் நடிக்கத் தொடங்கி இருந்தார்.... அட கஷ்டகாலமே டாக்குத்தரும் மியூட் போல எண்டு உத்துக் கவனிக்கத் தொடங்கினேன்.

இரண்டு பேரும் கைப்பாஷை தான்.... திடீரென்று டொக்டர் எழும்பி தன்ர ட்ரௌசர் பொக்கட்டுக்குள்ள அகழ்வாராய்ச்சி செய்து போனை எடுத்து காதுக்க வச்சு வாயால கதைக்க தொடங்கினார். ”


அவர்களிலும் மூண்டு பேர் மக்களின்ர வரிப்பணத்தில படிக்காமல் ஆத்தை அப்பன்ர சொந்தக் காசில ரஷ்யாவில படிச்சவையளாம்....

கோபத்தை விட வெட்கம் தான் நிறைய வந்தது எனக்கு...

ஒரு வருடத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து மருத்துவ பீடத்துக்கு தெரிவு செய்யப்படுபவர்கள் ஐந்து அல்லது ஆறு பேர்... அப்ப எப்படி இது சாத்தியம்?

சிலவேளை முல்லைத்தீவை சேர்ந்த மருத்துவர்கள் படித்து முடித்ததும்... முல்லைத்தீவை விட பின் தங்கிய மாவட்டங்களுக்கு சேவையாற்றப் போயிருப்பினமோ எண்டு... நினைச்சா... முல்லைத்தீவு தானாம் இலங்கையில அதிகஷ்ட பிரதேசம் எண்டு கூகிள் சொல்லுது. பிறகு நானென்னத்தை சொல்ல?


ஒரு வருடத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து மருத்துவ பீடத்துக்கு தெரிவு செய்யப்படுபவர்கள் ஐந்து அல்லது ஆறு பேர்...அப்ப எப்படி இது சாத்தியம்?

சிலவேளை முல்லைத்தீவை சேர்ந்த டொக்டர்ஸ் படித்து முடித்ததும்... முல்லைத்தீவை விட பின் தங்கிய மாவட்டங்களுக்கு சேவையாற்றப் போயிருப்பினமோ எண்டு... நினைச்சா... முல்லைத்தீவு தானாம் இலங்கையில அதிகஷ்ட பிரதேசம் எண்டு கூகிள் சொல்லுது.


ஆரும் எங்கையெண்டாலும் போகட்டும்....... என்ரை கேள்வி என்னெண்டா.....

கொக்கிளாயில வயல் காணிய சிங்களவன் பிடிச்சு வயல் செய்தா வரிஞ்சு கட்டிக் கொண்டு போய்... போட்ட கதியாலுகளை புடுங்கி எறியிறம்...... நல்ல முயற்சி!

செம்மலையிலையும்... மாத்தளனிலையும் கரைவலையை அவன் கொண்டு வந்து போட்டு மீன் பிடிச்சா... அடிச்சுப் பதறி ஐ.நா வரைக்கும் மனு குடுக்குறம்.... மிக நல்ல முயற்சி!

எங்கட வளங்களை சூறையாட நாங்கள் ஒருபோதும் இடமளிக்க கூடாது..... எவன் வந்தாலும் விடமாட்டம்.

ஆனா...படிச்சு, மருத்துவரா வந்ததும் நாங்கள் நைஸாக கழண்டு கொள்வோம். இதுக்கெண்டு சேவை செய்ய தெற்கில இருந்து அவர்கள் வருவார்கள்.

கொக்கிளாயிலையும் கொக்குதொடுவாயிலையும் தூக்கிப்பிடிச்ச கொடிய மாஞ்சோலை ஆஸ்பத்திரியிலையும் பிடிக்கிறது தானே?

வளங்கள் எண்டா எங்களுக்கு பௌதீக வளங்கள் மட்டும் தான் கண்ணுக்க தெரியும். மனித வளங்களை மறந்து விடுகிறோம். அப்படித்தானே?

அந்த இருபத்தெட்டு மருத்துவர்மாரும் தாங்கள் கும்பிட, மாஞ்சோலை ஆஸ்பத்திரியில புத்தர் சிலை வச்சா..... அப்ப தூக்கிப் பிடிப்போம். அப்படித்தானே...??

# சிம்மசொப்பனம்-38

மிர்தா நினைத்தது ஒன்று கூட நிறைவேறவில்லை. காஸ்ட்ரோ வழக்குகளை ஏற்று நடாத்தத் தயாரானார். அதே சமயம் , அரசியல் செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ள அவர் தயாராக இல்லை. ஆனால் அவர் எதிர்பார்த்ததைப் போல இந்த இரட்டைக் குதிரைச் சவாரி அவ்வளவு எளிமையானதாக இல்லை. அரசின் செயற்பாடுகளை எதிர்ப்பதே முக்கிய முழுநேரப் பணியாக மாறி விட்டது. மக்களுக்கு எதிராக அரசு எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையையும் எதிர்க்கத் துணிந்தார். போராட்டம் என்று வந்து விட்டால் முதல் வரிசையில் நின்று விடுவதில் இவருக்குத் தணியாத தாகம்.

இப்படி ஒரு முறை ஓர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டபோது காஸ்ட்ரோ கைது செய்யப்பட்டார். நீதிமன்றத்தில் கொண்டு போய் நிறுத்தினார்கள் . நீதிபதி காஸ்ட்ரோவை கூர்மையாகப் பார்த்தார்.

'உங்கள் சார்பில் வாதாட யாராவது இருக்கிறார்களா?'

'இல்லை' என்ற காஸ்ட்ரோ,' நானே ஒரு வழக்கறிஞர்தான். என்னுடைய வாழ்க்கை நானே வாதடிக் கொள்கிறேன்' என்றார்.

'சரி. அப்படியானால் வழக்கறிஞர் உடையைப் போட்டுக் கொண்டு வாருங்கள்" என்றார் நீதிபதி.


ஆனால் வழக்கறிஞர் உடை அவரிடம் கிடையாது. அது மட்டுமன்றி வாதாடுவதற்கு முன்பு நீதிமன்றத்துக்குச் செலுத்த வேண்டிய ஐந்து செண்ட் கட்டணமும் இல்லை. உடனே துண்டை ஏந்தி அங்கேயே வசூல் நடத்தினர். பணம் கிடைத்தது. ஒரு கறுப்பு மேலாடையும், கறுப்புக் குல்லாயும் வாடகைக்கு வாங்கப்பட்டது. உடை மாற்றிக் கொண்டு வழக்கறிஞராக நீதிமன்றத்தில் நுழைந்தார் காஸ்ட்ரோ.'

நுழைந்ததும் நுழையாததுமாக, நீதிபதி அவர்களே, நான் இந்த அரசைக் குற்றம் சாட்ட விரும்புகிறேன்' என்றார்.

'அதெப்படி?' என்றார் நீதிபதி.

அவ்வளவு தான். காஸ்ட்ரோ தனது உரையைத் தொடங்கினார். பேசினார், பேசினார், பேசிக் கொண்டே இருந்தார். நீதிமன்றம் மக்கள் கூட்டமாக மாறியது. நீதிபதி, காவல்துறையினர், சாட்சிகள் அனைவரும் பொதுமக்களாக மாறிப் போயினர். அரசுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்கிறார் என்பதால் தான் கைது நடவடிக்கை, ஆனால் தடைசெய்யப்பட்ட அனைத்து விபரங்களையும் நீதிமன்றத்திலேயே ஒன்றன் பின் ஒன்றாகப் பிரசாரம் செய்தார். கன்னத்தில் கை வைத்து காஸ்ரோவின் உரையைக் கேட்டு முடித்த நீதிபதி, உரை முடிந்தவுடன் காஸ்ட்ரோவை உடனடியாக விடுவித்தார்.

(தொடரும்)



## சொற்சிலம்பம் போட்டி இல. 689

**மேலிருந்து கீழ்**

1 - கடவுளுக்கு நைவேத்தியம் செய்த உணவு.
2 - பெண்கள்.
3 - வறுமைத்தன்மை.
4 - பூச்சாகப் படிவது.
5- தூர அளவீடு.
7 - பண்பற்ற தன்மை.
9- பர்வதம்.
10- திறன்.
13- இது மற்றொரு தாவரத்தில் ஒட்டி வளரும்.
14- காதுக்குள் சேர்வது.
15- பாணம்.
16- நலம்.
17- கிணற்றில் நீர் அள்ளுவதற்கு உதவுவது.
18- எது.
19-குரோதம்.

**இடமிருந்து வலம்**

1 - வெகு சிறப்பு என்பதைக் குறிக்கும் சொல்.
4- ஒரு வகைத் தானியம்.
6- நிற்பாட்டு.
7- கெண்டை மீன்.
8 -வல்லமை.
11 - சிரசு.
12- திறன் மிக்க தன்மை
14 -தொண்டையில் இருந்து எழுவது.
15 -இருபால் இணைவில் உருவாவது.
16-தீயைத் தொட்டால் ....
17- மனைவி.
18- வேள்வி.
19- முக்கனிகளுள் ஒன்று.
20-யானைக்கு மட்டும் உள்ள விசேட உறுப்பு.
21-ஒட்டுவது இதனால்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | | 4 | 5 |
| | | 6 | | | 7 | | |
| 8 | 9 | | | 10 | | | |
| 11 | | | 12 | | | | 13 |
| | | 14 | | | | 15 | |
| | 16 | | | | 17 | | |
| 18 | | | | 19 | | | |
| 20 | | | | | | 21 | |

அனுப்புபவர் பெயர்:-----------------------------------

விலாசம்:------------------------------------------

---------------------------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**

"361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00மணி வரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்ட கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

S.K.குணபாலன்,
அள வெட்டி கிழக்கு,
அளவெட்டி.

க.தில்லையம்பலம்,
கதிர்காமம் கோவிலடி,,
வதிரி, கரவெட்டி.

பா. நியூட்டன் சதீஷ்,
மீசாலை கிழக்கு .
மீசாலை.

ஐ.விஜயபாலன்,
இல- 7. நவீனசந்தை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சி. எழில்வேள் ,
அரசினர் வைத்தியசாலை,
பளை.

### சொ. சி .போட்டி இல 689

சொற்சிலம்பம் போட்டி 689ற்கான விடை களை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம்23 ஆம் திகதி ஆகும்.

விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2015, செப்ரெம்பர் 30 மற்றும் ஒக்ரோபர் 07.ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபால் தலையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

1ஆம் பரிசாக ரூபா 250 உம், 2ஆம் பரிசாக ரூபா 150 உம், 3ஆம் பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### போட்டி இல 686இல் பரிசு பெற்றோர்

1
வ.கு. ஜெயபாலன்,
இல 9/1, பழம் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

2
எஸ். கஜதீனி,
தொட்டிலடி
சங்கானை.

3
ஆர். பகலினி,
இளையதம்பி பெண்கள்விடுதி,
மானிப்பாய் வீதி,
உடுவில், சுன்னாகம்.

### சொற்சிலம்பப் போட்டி 687இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.தீபாவளி.
2.விடுதி.
3.வாகடம்.
4.திடம்.
5.ஆதவன்.
6.வில்லை.
10.விநாயகர்.
13.பிரி.
14.சரகம்.
15.சம்பாதி.
16.அறம்.
17.மதகு.
18.மகம்.
20.பாதி.
21.தக.

**இடமிருந்து வலம்**

1. தீவிரவாதி.
5. ஆவி.
7.பாடு.
8.கடத்தல்.
9.வதிவிடம்.
11.வலை.
12.நாம்.
13.பின்.
14.சய.
15.சரி.
17.மரகதம்.
18.மற.
19.தகர்.
20.பாதகம்.
22.கும்.
23.அதிகம்.

# அதிசயக்...

( 02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வளவு உயரத்தில் இந்த குகைகளை எப்படி உருவாக்கினார்கள்? எதற்காக, யார் இதை உருவாக்கினார்கள்? இப்படி பல கேள்வி கள் முதலில் இந்த ஆய்வு மேற்கொண்ட குழுவிற்கு ஏற்பட்டது. இந்தக் குகைகளை தொல்பொருள் ஆய்வாளர் பீட் எதென்ஸ் என்பவரின் தலைமையில் ஒரு குழு ஆய்வு செய்தது. இவர் முதலில் 1981 இல் இந்தப் பகுதியில் ஆராய்ச்சி மேற்கொண்டார். 2011ஆம் ஆண்டு எட்டாவது முறையாக இந்தப் பகுதியை மார்க் அலெண்டெர்பெர் (கலிபோர்னிய பல்கலைக்கழகம்) மற்றும் ஜாக்குலீன் இங் என்ற பெண் ஆராய்ச்சியாளரும் (வெஸ்டர்ன் மெக்சிகன் யுனிவர்சிட்டி), மோகன் சிங் லாமா என்ற நோபாளிய தொல்பொருள் ஆய்வாளரும் ஆய்வு செய்தனர். மர்ம நிகழ்வுகள் : ஆய்வுக் குழுவினரில் இருவருக்கு குகைகளில் அடுத்தடுத்த ஆய்வின் போது, அடுத்தடுத்து விபத்து ஏற்பட்டது. ஆய்வு தடைப்பட்டது. லிங்கன் எல்ஸ் என்ற விடியோ கிராஃபர் ஹெல்மெட் எடுத்த சமயத்தில், கற்கள் சரிந்து தலையில் விழுந்து மண்டை எலும்பு உடைந்து. ஆபத்தான கட்டத்தில் காத்மாண்டுவில் சிகிச்சை பெற்று பின் நலமடைந்தார். இன்னொருவர் ரிச்சர்ட் (மலை ஏறி மற்றும் போட்டோகிராபர்) விழுந்து அடிபட்டதில் முதுகு எலும்பு முறிவு ஏற்பட்டு ஹெலிஹொப்டரில் மீட்கப்பட்டார். இந்த மோசமான நிகழ்வுகள் அந்த குகைகளை பாதுகாக்கும் ஆவிகளினால் ஏற்பட்டது என்பது அந்த பகுதியில் வசித்த ஒரு லாமாவின் கணிப்பு. இந்தக்குகைகள் மர்மங்கள் பற்றி விவரிக்கிறார் தொல்பொருள் ஆய்வாளர் பீட் எதென்ஸ்: இமய மலையின் பெரும்பகுதி ஒரு காலத்தில் கடலில் மூழ்கிய நிலையில் இருந்த நிலப்பரப்பு என்கிறார்கள். இமய மலையின் 5ஆயிரம்-6 ஆயிரம் அடி உயரத்தில் கடல் அலையின் அரிப்பின் சுவடுகள், கடல் உயிரினப் படிமம் ஆனவை எல்லாம் கிடைத்துள்ளன. அந்தக் காலத்தில் பெரு வெள்ளம், அல்லது கடல் நீர் அங்கு புகுந்து இருக்கலாம், அதன் விளைவாக உயரமான இடத்தில் குகை அமைத்து தங்கி இருப்பார்கள். இப்படி கடல் நீர் மட்டம் உயர்ந்ததை அப்போது பல வரலாற்று,புராண நூல்களிலும் குறிப்பிட்டு இருக்கிறார்கள், இதனை பெரு வெள்ளக்காலம்' என்கிறார்கள். வெள்ளத்திற்குப் பயந்தே மக்கள் உயரமான இடத்திற்கு குடிபெயர்ந்திருக்க வேண்டும்' என்கிறார் அவர்.

சாம்ட்ஜோங் குகையில், ஓர் இறந்த உடல் ஒரு சவப் பெட்டியில் இருந்தது. இறந்த உடல் வெறும் எலும்புக்கூடாக இருந்தது. பெட்டி மூடியின் மேல் ஒரு குதிரையின் மீது வீரன் ஒருவன் அமர்ந்திருப்பது போன்ற ஒரு நிழல் சித்திரம் இளஞ்சிகப்பு மையால் வரையப்பட்டிருந்தது. இடதுபுறம் செழிப்பான ஒரு மரம் அதன் வலதுபுறம் காய்ந்து போன மரம். இந்த குகை ஒரு வசதியானவர்களுக்கான மயான குகையாக இருந்திருக்க வேண்டும். மேலே சொன்ன மம்மிக்ளுடன் 30 சிதைந்த மம்மிகள் கிடைத்தன. மம்மிகள் மரத்தாலான சவப்பெட்டியில் கிடத்தப்பட்டிருந்தன. 2 ஆயிரம் வருடங்கள் பழமையானவை. இவற்றின் உடலில் பட்டையான துணிகளால் சுற்றப்பட்டிருந்தன. தாமிர கை வளையல்கள், கண்ணாடியாலான நீள் பாசிவடிவ மணி மாலைகள், சங்கு மாலைகள் அணிவிக்கப்பட்டிருந்தன.

# காதலின் சின்னம்...

( 14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(optogenetics) இப்பொழுது நரம்பியல் விஞ்ஞானிகள் பயன்படுத்துகின்றனர். நனொ தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் மிக நுணுக்கமான அளவுகளை மூளையின் செயற்பாட்டின்போது எடுப்பது விரைவில் சாத்தியமாகும் எனவும் தெரிகிறது.


**அடிப்படை அலகுகள்**

மூளையின் செயற்பாடுகள் அனைத்திற்கும் அடிப்படையாக இருப்பது மூளையின் மூலக் கலங்களான நியூரோன் (neuron) என்ப்படுவதாகும். இவற்றில் எழும் நுண்ணிய மின்அலைகள் கலத்திலிருந்து ஏனைய கலங்களுக்கு பரவுவதன் மூலமே மூளை செயற்படுவதாகக் கருதப்பட்டது.

இவற்றை ஒன்றோடு ஒன்று இணைப்பதாக கிளையல் (Glial cells) கலங்கள் இருக்கின்றன. இவற்றில் மூன்று வகைகள் உண்டு. astrocytes, microglia, and oligodendrocytes எனப்படுகின்றன. நியூரோன்கள் மட்டுமே மூளையின் செயற்பாட்டையும் முழுமையாகக் கட்டுப்படுத்துவதாக ஆரம்பத்தில் கருதப்பட்டது.

இந்த கிளையல் கலங்கள் நியூரோன்களை பாதுகாப்பதற்கும், கலங்களின் இடையேயான தொடர்புகளைக் கடத்துவதற்கும் போசாக்குகளைக் கடத்துவதற்கும் மட்டுமே என்றே முன்னர் நம்பினார்கள். ஆனால் ஆஸ்ரோசைட்ஸ் மற்றும் மைக்ரோகிளயா (astrocytes, microglia) ஆகியவை தகவல்களை பதப்படுத்துவதற்கும் உதவுகின்றன என அண்மைய ஆய்வுகள் கூறுகின்றன.

பல்வேறு நட்சத்திர வடிவம் கொண்ட ஆஸ்ரோசைட்சானது நியூரோன் போலவே இணைப்புகளை ஏற்படுத்தி சமிக்கைகளை தமக்கிடையேயும், நியூரோன்களுக்கும் அனுப்பும் ஆற்றல் கொண்டவை. ஆயினும் தானாகவே மின் சமிக்கைகளை உற்பத்தியாக்க கூடியவை அல்ல.



எலிகளில் செய்யப்பட்ட ஆய்வின்படி, ஒவ்வொரு ஆஸ்ரோசைட்சும் பல்லாயிரக் கணக்கான இணைப்புகளுடாக தகவல் பரிமாற்றத்தை ஒழுங்கு பண்ணக் கூடியவையாகும். அத்துடன் மயிர்த்துழைக் குழாய்கள் (capillaries) ஊடான இரத்த ஓட்டத்தையும் கட்டுப்படுத்தக் கூடியவையாகும்.

ஆனால் மனித ஆஸ்ரோசைட்ஸ்கள் எலியினுடையதை விட அளவில் சற்றுப் பெரியவையாக இருக்கின்றன. இவற்றை எலியின் மூளையில் மாற்றீடு செய்தபோது எலிகளின் நினைவாற்றலானது பல்மடங்கு பெருகியது. மனித ஆஸ்ரோசைட்ஸ்கள் மேலும் பல செயற்பாடுகளைச் செய்யும் ஆற்றல் கொண்டவை என்ற முடிவுக்கு இவ் ஆய்வு அறிக்கை மூலம் நாம் வர முடியும்..

இதேபோல மைக்ரோகிளியாவும் பல்வேறு செயலாற்றல் கொண்டவை என கடந்த 10 வருடங்களுக்குள் செய்யப்பட்ட ஆய்வுகள் உணர்த்துகின்றன. அவை மூளையின் எதிர்ப்பாற்றல் சக்தியுடன் தொடர்புடையவை. இறந்த கலங்களைத் துடைத் தெடுக் கின்றன. நுண்ணிய தாக நீளும் விரல் போன்ற அலகுகளால் சூழலைக் கண்காணிக் கின்றன. அத்துடன் தேவையற்ற இணைப்பு களை அழித்து புதியவை உருவாக இடம் அளிக்கின்றன.

இவ்வாறன ஒரு சில ஆய்வுகள் மனிதரில் மேற்கொள்ளப்பட்ட போதும் பெரும்பாலானவை எலி போன்ற மிருகங்களிலேயே செய்யப்படுகின்றன. மேலும் நுணுக்கமான ஆய்வுகளை மனிதரில் செய்வதற்கான நவீன கருவிகளின் வரவு தேவையாக உள்ளது.

நரம்பியல் விஞ்ஞான ஆய்வுகளாவன மூளையின் கனபரிமாணம் மற்றும் வடிவுகளைத் தாண்டி அதன் உட்பாகங்களுக்கும் சென்றுள்ளதைப புரியக் கூடியதாக உள்ளது. மூளையின் கலங்களையும் அதன் மூலப் பகுதிகளையும் நோக்கிய துல்லியமான ஆய்வுகள்; ச்சாத்தியமாகின்றன.

**செயற்கை மூளை**

இதற்கிடையில் ஒஸ்ரிய விஞ்ஞானிகளால் மறு உருவாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி மனித மூளையின் சிறிய வ்டிவத்தை ஆய்வு கூடத்தில் உருவாக்க முடிந்திருக்கிறது. இது பற்றிய செய்திகளை . பத்திரிகைளில் படித்திருப்பீர்கள். மூளையின் பல பகுதிகளான cerebral cortex, retina, meninges, choroid plexus போன்றவற்றின் ஆரம்ப கட்ட வளர்ச்சியை 2 மாதத்தில் ஆய்வு கூடத்தில் எட்ட முடிந்தாலும் அதற்கு மேல் வளர்ச்சி அடையவில்லை.

போதிய குருதி ஓட்டம் மற்றும் ஒட்சிசன் இல்லாமையால் வளர்ச்சி தடைப்பட்டது என்று அவர்கள் சொன்னார்கள். இருந்த போதும் மனித உடலில் பயன்படுத்தக் கூடிய மூளையை உருவாக்குவது அண்மைக்காலத்தில் சாத்தியமில்லை என்றே படுகிறது

இருந்தபோதும் இந்த ஆய்வை தட்டிக் கழிக்க வேண்டியதில்லை மூளையின் செயற்பாடுகள் அத நோய்கள் பற்றிய பல புதிய செயதிகளையும் தருவதோடு ஆய்வுக்கான புதிய கதவுகளையும் அது திறந்து விட்டிருக்கிறது.

**முடிவாக**

இன்னும் பல்லாயிரம் படிகள் எங்கள் முன் காத்திருக்கினறன. தகவல்கள் மின்அலைகளாக எவ்வாறு உருவாகின்றன? அவை ஒன்றிலிருந்து மற்றது எவ்வாறு வேறுபடுகிறது போன்ற பலவற்றையும் கண்டறிய வேண்டியுள்ளது.

காதலின் சின்னமாக மூளையி கலங்களான நியூரோன் மற்றும் ஆஸ்ரோசைட்ஸ, 'மைக்ரோகிளய போன்றவற்றைக் குறியீடாக சினிமாவில் காட்டும் விஞ்ஞான அறிவியல் தெளிவு எமது நெறியாளர்களுக்கு கிட்டும் காலம் வருமா?

வரும் என நம்பலாம். அதேபோல திரைப்பட ஆர்வலர்களும் அக் குறியீடுகளை தெளிவாகப் புரிந்து கொள்ளும் அறிவியல் வளர்ச்சி தொலை தூரத்தில் இல்லை.

இவ்வார

# இராசி பலன்

**09.09.2015 ~15.09.2015**

**மேஷம்**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

அஷ்டம சனியின் தாக்கம் இருப்பதால், தகுதிக்கு மீறிய செயலில் ஈடுபட வேண்டாம். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பூர்வீகச் சொத்து மூலம் வருமானம் கிடைக்க வாய்ப்புண்டு. உடல் நலனில் அக்கறை காட்டுவீர்கள். புதிய நண்பர்களின் அறிமுகத்தால் நன்மை ஏற்படும். வாகன பயணத்தின் மூலம் இனிய அனுபவம் உண்டாகும். மனைவியின் செயல்பாடு கண்டு மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும்.

**ரிஷபம்**

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

உறவினரிடம் இருந்த கருத்து வேறுபாடு மறையும். அறிமுகம் இல்லாதவர்களிடம், அதிக நெருக்கம் வேண்டாம். புத்திரர்களின் செயல்பாடு திருப்தி அளிக்கும். உடல் நலனில் கவனம் செலுத்துவது நல்லது. மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சியும், ஆதாயமும் உண்டாகும். பணியாளர்கள் பணிச் சுமையைத் திறம்பட சமாளிப்பர். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் மேற்கொள்வர். மாணவர்கள் சாகச விளையாட்டில் ஈடுபட வேண்டாம்.

**மிதுனம்**

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

உறவினர் மத்தியில் அந்தஸ்து அதிகரிக்கும். குடும்பத்தில், சுப விஷயம் குறித்த பேச்சில், நல்ல முடிவு கிடைக்கும். புத்திரர் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். எதிரி பிரச்னை அடியோடு விலகும். மனைவியின் கருத்துக்கு மதிப்பு கொடுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**கடகம்**

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

வீடு, வாகனம் வாங்க யோகமுண்டு. கருத்து வேறுபாடு நீங்கி, தாய்வழி உறவினர் அன்பு பாராட்டுவர். புத்திரர் செயல்பாடு அதிருப்தி அளிக்கலாம். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி கண்ணும் கருத்துமாக குடும்ப நலம் பேணுவார். தொழிலில் புதிய உத்தி மூலம் வாடிக்கையாளரைக் கவர்வீர்கள். பணியாளர்கள், பணிச்சுமையில் இருந்து விடுபடுவர். பெண்கள், சகோதரர்களின் உதவி கிடைக்கப் பெறுவர்.

**சிம்மம்**

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

பிள்ளைகளின் செயல்பாடு கண்டு பெருமிதம் கொள்வீர்கள். உடல் நலனில் அக்கறை கொள்வீர்கள். மனைவி விரும்பிக் கேட்ட பொருளை வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் படிப்படியாக லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்ல நேரிடும்.

**கன்னி**

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

கடந்த கால நற்செயலுக்கான நன்மை தேடி வரும். வீடு, வாகன பாதுகாப்பில் கவனம் செலுத்தவும். பிள்ளைகள், படிப்பில் சிறந்து விளங்குவர். மனைவியின் அன்பு கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள், விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கப் பெறுவர். பெண்கள், குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**துலாம்**

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

எதிர்கால வளர்ச்சி குறித்து திட்டமிடுவீர்கள். பேச்சில் நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது. சகோதர வகையில் சுப விஷயம் குறித்த பேச்சு நடக்கும். பிள்ளைகள் பிடிவாத குணத்துடன் செயல்படுவர். மனைவியின் கருத்துக்கு மதிப்பளிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**விருச்சிகம்**

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்குவர். எதிரியின் கெடுசெயல் பலமிழந்து போகும். மனைவியின் செயல்பாடு கண்டு மனம் மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் விரிவாக்க முயற்சியில் ஈடுபடுவீர்கள். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை வந்து சேரும். பெண்கள் மகிழ்ச்சிகர வாழ்வு நடத்துவர். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**தனுசு**

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

மனதில் புத்துணர்வு மேலோங்கும். மறைமுக எதிரிகளை இனம் கண்டு ஒதுங்குவீர்கள். வீடு, வாகன வகையில் பராமரிப்பு செலவு உண்டாகும். பிள்ளைகள் படிப்பில் சாதனை புரிவர். மனைவியால் செயல்பாடு பெருமையளிக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கப் பெறுவர். பெண்கள் ஆடம்பரப் பொருட்கள் வாங்கி மகிழ்வர்:

**மகரம்**

**திருவோணம்,அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

சகோதரர் வழியில் கருத்து வேறுபாடு உண்டாகும். வாகன பயணம் மூலம் இனிய அனுபவம் பெறுவீர்கள். பிள்ளைகளின் குறையை சரி செய்வதில் நிதானத்தைப் பின்பற்றவும். எதிரிகளை இனம் கண்டு விலகுவீர்கள். மனைவியின் உடல் நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர், அக்கறையுடன் பணிபுரிவது நல்லது.

**கும்பம்**

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்**

புத்திரரின் நற்செயல் பெருமை தேடித் தரும். வாகனீத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது. எதிரியால் ஏற்பட்ட தொல்லை விலகும். மனைவியிடம் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள், பணி விஷயமாக வெளியூர் செல்ல நேரிடும். பெண்கள், பிறருக்காக பணப் பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்கள், விடாமுயற்சியுடன் படித்து முன்னேறுவர்.

**மீனம்**


**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

வாகனத்தில் மித வேகம் பின்பற்றுவது நல்லது. தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள். புத்திரர்களின் செயல்பாடு பெருமையளிக்கும். ஆரோக்கியம் பலம் பெறும். விருந்து, விழாவில் அடிக்கடி கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தியால் லாபம் உண்டாகும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளானாலும், ஆதாயம் கிடைக்கும். பெண்கள் பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர்.

# சுதந்திர வேட்கை

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 102


அடேல் பாலசிங்கம்



விடுதலைப்புலிகளின் போராட்டம் மட்டிலும், புதுடில்லி சென்ற அவர்களின் பிரதிநிதிகள் மட்டிலும் அடாவடித்தனமான போக்கைக் கடைப்பிடித்தமையால் இறுதியில், இந்தியா அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் பெரிய விலை கொடுக்க வேண்டி நேர்ந்தது.. இந்தியப் படைகள் யாழ்ப்பாணத்துக்குள் பிரவேசித்ததை அடுத்து ஓகஸ்ட் 04 இல் பிரபாகரன் தமது மக்களுக்கு ஓர் உரை நிகழ்த்தினார். யாழ்ப்பாணம் சுதுமலையில் நிகழ்ந்த இந்தப் பொதுக் கூட்டத்துக்கு மிகப்பெரும் சனத்திரள் அணி திரண்டது."நான் இந்தியாவை நேசிக்கிறேன்" என்ற தலைப்பில் அவர் நிகழ்த்திய மிகப் பிரபல்யம் வாய்ந்த உரை அது. ஒப்பந்தம் தொடர்பான தமது நிலைப் பாட்டையும் இந்திய அமைதிப் படையினரிடம் ஆயுதங்களை ஒப்படைப்பது பற்றியும் அவர் அதில் விளக்கினார். இந்தியாவின் அரசியல் மற்றும் இராணுவ பலத்தினால் தமது இலட்சியங்கள் கட்டுப்படுவதை அவர் ஒப்புக கொண்டார்; ஆயினும் தனித் தமிழ் நாடு தொடர்பான போராட்டத்தைக் கைவிட அவர் மறுத்தார். மிகக் கவனமாக தொகுக்கப்பட்ட இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உரையிலே தமிழ் மக்களின் வேணாவை அவர் வெளியிட்டதோடு , இந்தியாவின் கேந்திரச் செல்வாக்கும் சுயநிர்ணயத்துக்கான தமிழ் மக்களின் போராட்டமும் உரசுவதை அவர் எடுத்துச் சொன்னார். அதன் பின்னர் நடைபெற்ற சம்பவங்கள் அவருடைய கூற்றை, யதார்த்தமானவை என்று நிரூபித்தன. தொடக்கத்தில் இருந்தே ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் காணப்பட்டது. சிறிலங்காவினதும், இந்தியாவினதும் கருத்துக்கள் மட்டும் கவனிக்கப்பட்டதேயன்றி , பாதிப்புக்கு உள்ளான தமிழ் மக்களின் அங்கலாய்ப்புக்கள் பொருட்படுத்தப்படவில்லை. எடுத்துக்காட்டாக் விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும் என்ற கடப்பாடுகளைத் துரிதமாகச் செயற்படுத்த வேண்டும் என்பதில் இந்திய அமைதிப் படைத் தளபதிகளும், சிங்கள இராணுவ அதிகாரிகளும் வேகம் காட்டினார்களே ஒழிய , ரஜீவ் காந்தி வாக்குறுதியளித்த இடைக்கால நிர்வாகம் நடைமுறைப் படுத்தப்படுவதை வேண்டுமென்றே தாமதப்படுத்தினார்கள். இதனால் விடுதலைப் புலிகளிடையேயும் தமிழ் மக்களிடையேயும் சந்தேகம் எழுந்தது நியாயமானதே! விடுதலைப்புலிகள் கணிசமான அளவு ஆயுதங்களை ஒப்படைத்திருந்தனர். சிறிலங்கா அரசுக்கு எதிரான அனைத்து போர் நடவடிக்கைகளையும் நிறுத்தியிருந்தனர். இந்த நிலையிலே வடக்குக் கிழக்கில் இடைக்கால நிர்வாக அமைப்பை இந்திய அரசு நிறுவ வேண்டும் என்று விடுதலைப்புலித் தலைவர்களும் போராளிகளும் எதிர்பார்த்து நின்றார்கள். மாறாக இந்தியர்கள் மௌனமாக இருக்க, தமிழ்ப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை சிறிலங்கா அரசத் தலைவர் ஜெயவர்த்தனா தீவிரப்படுத்தியதோடு, கிழக்கிலே புதிய காவல்துறை நிலை யங்களைத் திறந்து கொண்டிருப்பதை ஆற்றாமை நிலையில் நின்று விடுதலைப்புலிகள் பார்த்துக்கொண்டிருக்க நேர்ந்தது.

(பதிவு தொடரும்)

# அவசரப்படலாமா?



மாலை நேரம். இரு வேடர்கள் பேசிக் கொண்டு போனார்கள். அதில் ஒருவன் நாளை நாம் வேட்டைக்கு வரும் போது ஆமையைப் பிடிக்க வேண்டும். காட்டு ஆமைக்கறி சாப்பிட்டு வெகு நாளாயிற்று என என் மனைவி ஆசைப் பட்டுக் கேட்டாள் என்றான்.
ஆமாப்பா ஆமைக்கறி சுவை யாக இருக்கும். நாம் நாளை ஆமை பிடிப்போம் என்றான் அவனுடன் வந்தவன்.
இவர்கள் பேச்சைப் புதருக்குள் ஒளிந்திருந்த ஆமை ஒன்று கேட்டது. அதற்கு உயிர் பயம் ஏற்பட்டது. நம்மால் வேகமாக ஓடவும் முடியாது. ஒளிந்து கொண்டாலும் முதுகு ஓடு நம் இருப்பிடத்தைக் காட்டி கொடுத்து விடும். எப்படி தப்பிப்பது என்று யோசிக்கும் போது .நண்பன் கொக்குவினது ஞாபகம் வந்தது. கொக்கு வசிக்கும் மரம் அருகே சென்றது அந்த ஆமை.மாலை நேரம் என்பதால் கொக்கும் அந்த மரத்துக்குத் திரும்பியிருந்தது.
ஆமை கொக்கிடம், தன்னுடைய பிரச்சனையை எடுத்துக்கூறி, தன்னை இந்த இடத்திலிருந்து அது மீன்பிடித்துச் சாப்பிடும் குளத்தருகே கொண்டு போய் விடச் சொல்லிக் கேட்டது. அந்தக் கொக்கு, ஆமையே உன் எடை அதிகமானது; உன்னை நான் எப்படித் தூக்கிச் செல்ல முடியும்? என்று கேட்டது. அதற்கு ஆமையும் ஒரு யோசனை சொன்னது.
நண்பனே, நீயும் இன்னொரு கொக்கு நண்பனும் சேர்ந்து ஒரு கனமான நீளக்குச்சியின் இரு முனைகளை ஆளுக்கொருவராகப் பிடித்துக் கொள்ளுங்கள். குச்சியின் நடுப்புறத்தை நான் கவ்விக்கொள்கிறேன். அப்படியே என்னைத் தூக்கிக் கொண்டு பறந்து செல்லுங்கள். இருவரும் சேர்ந்து என்னை தூக்கிக் கொண்டு செல்வது எளிது என்றது. இதற்கு அந்தக் கொக்கும் ஒப்புக் கொண்டது.
மறுநாள் ஆமை ஒரு கம்பை எடுத்து வர .அதன் இரு முனைகளை இரு கொக்குகள் அலகில் பிடித்துக் கொண்டன. ஆமை நடுவில் கவ்விக் கொண்டது. அவையிரண்டும் சேர்ந்து ஆமையை தூக்கி கொண்டு பறந்தன. இந்தக் காட்சி வேட்டைக்கு வந்து கொண்டிருந்த அந்த வேடர்கள் கண்ணில் பட அவர்களுக்கு மிகுந்த ஆச்சரியம்!
அட இந்தக் கொக்குகளைப் பாருங்கள்... ஒரு ஆமையையே தூக்கிப் பறக்க கற்றுக் கொண்டன. ஒரு குச்சியை எடுத்து இரு புறமும் கொக்குகள் பிடித்துக் கொள்ள நடுப்புறத்தை ஆமை பிடிக்க இப்படி ஒரு அருமையான யோசனையைக் கொண்ட கொக்குகள் உண்மையில் புத்திசாலிகள்தான் என்றனர். வேடர்கள் பேசியது மேலேயிருந்த ஆமையின் காதில் விழுந்தது இந்த யோசனை கொக்குகளுடையதில்லை, இது என்னுடைய யோசனை என்று கூற நினைத்து அந்த ஆமை வாய் திறக்கக் குச்சியின் பிடியை விட்டது. சிறிது நேரத்தில் ஆமை அங்கிருந்து கீழே விழுந்து ஓடு சிதறி இறந்தது. இப்படித்தான் சிலர் தங்களின் பாதுகாப்பறியாமல் அவசரப்பட்டு இழப்புகளைச் சந்திக்கின்றனர்.

இந்த இரு படங்களுக்கு இடையே உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்.





# அன்னை தெரேசா

உலகம் வாழ்வது அன்பாலே
இதை உணரலாம் சிலரின் செயலாலே
யுகோஸ்லோவியா நாட்டில் பிறந்தது
சேவை சேவையென்றே ஒரு குழந்தை.

செல்வக் குடும்பத்தில் பிறந்தாலும்
ஏழைக்காக மனம் கலங்கினார்
இந்திய தேசம் தேர்ந்தெடுத்து
பணியைத் தொடங்கினார்
அன்னையுமே.

நோயுற்றவர்க்கே மருத்துவமென
கொல்கத்தா நகரில் தொடங்கினார்
யாரும் தீண்டத் தயங்கிய
தொழுநோய்க்கான சேவையினை

அன்னை செல்வரிடம் கேட்டார்
நிதியுதவி
அவரோ துப்பினார் எச்சிலையே
எச்சில் எனக்கு, உதவி எங்கே?
கேள்வியால் கல்லுள்ளம் மாறியது.

அன்னையின் சேவைக்குக்
கிடைத்தது
பத்மவிருதோடு மாகஸேஸேவும்
அமைதியின் நோபல் பரிசு பெற்று
'பாரத ரத்னா'வாய் வலம் வந்தார்.

கன்னியாக வாழ்ந்த அன்னையவர்
சேவையால் மக்கள் மனம் நிறைந்தார்
மனிதனும் தெய்வமாகலாமென
புனிதராக மாறி நிரூபித்தவர்.

-வள்ளுவன்




# சுதந்திர தேவி சிலை

அமெரிக்காவின் அடையாளமாக உள்ள சுதந்திர தேவி சிலை 305 அடி உயரத்துடன்(93மீற்றர்) கம்பீரமாக வானை நோக்கி உயர்ந்து நிற்கிறது.
அமெரிக்காவின் அடையாளங்களுள் ஒன்றாக 125 வருடங்களுக்கும் மேலாக காட்சி தரும் சுதந்திர தேவி சிலையைப் பார்த்திருப்பீர்களே? ஒரு கையில் விளக்கைத் தூக்கிப் பிடித்தபடி இன்னொரு கையில் புத்தகம் ஏந்தியபடி தலையில் கிரீடத்துடன் நிற்கும் அந்தப் பிரம்மாண்டமான உருவத்தைப் பார்த்தாலே மகிழ்ச்சி வரும் அல்லவா? உலகுக்கு வெளிச்சமூட்டும் விடுதலை என்றும் சுதந்திர தேவி சிலை என்றும் அழைக்கப்படும் இந்தச்சிலை ஒரு நட்புறவின் அடையாளம் என்பது தெரியுமா உங்களுக்கு? ஆம் பிரான்ஸ் அமெரிக்காவுக்கு வழங்கிய பரிசு தான் சுதந்திர தேவி சிலை ஆகும்.




# வர்ணம் தீட்டலாம்



# மாலையில் யாரோ மனதோடு பேச...

த. சிவசங்கரி
பனிப்புலம்




மாலையில் யாரோ மனதோடு பேச என்று பாடிக்கொண்டிருந்த யாழினியின் பாடலுக்குக் கடலலைகள் இசை மீட்டின. தனது காதலனின் வருகைக்குக் காத்திருக்கும் யாழினியைத் தென்றல் தழுவிக் கொண்டிருந்தது. அமுதனின் வருகையைக் கண்டதும் யாழினியின் விழிகள் சூரிய ஒளியாகப் பிரகாசித்தது. தனது வருகையின் ஆனந்தத் தால் யாழினியின் மனதில் பூக்கள் பூத்துக் குலுங்குவதை அவளது விரிந்த உதடுகளின் வழியாக கண்ட அமுதன் மயங்கி அவ ளைக் கட்டியணைத்தான்.

கடலலையின் ஓசையோடு தங்கள் காதல் காவியங்களைப் பேசத்தொடங்கினர் இந்த இளஞ்சிட்டுக்கள். நான்காம் படிவத்தில் பயிலும் இவர்களின் காதலின்வயது இரண்டு ஆண்டுகள் ஆனாலும் இவ்வுறவைப் பற்றி யாழினியின் பெற்றோருக்கு எதுவும்தெரியாது. காதல் காவியங்களைத் தொடர்ந்து கொண்டிருக்கையில் அகில னின் தொலை பேசியின் ஒலி இவர்களின் ஊடலுக்குச் சங்கொலியாக விளங்கியது.

அமுதனின் நண்பன் அகிலன் தனது நண்ப னிடம் அளவளாவஆரம்பித்தான். யாழினியிடம் கொஞ்ச நேரம் என்று கண் ஜாடைக் காட்டி அமுதன் அகிலனிடம் உரையாடத் தொடங்கி னான். அவர்களின் உரை யாடல் இடையூறாக இருப்பதை எண்ணி யாழினி மனதுக்குள் வருந்திக் கொண்டு கடலலைகள் கரையை முத்தமிட் டுச் செல்லும் காட்சியை ரசித்துக் கொண்டிருந்தாள்.

கண்கள் கடலலையை ரசித்தாலும் செவிகள் இரண்டும்இவர்களின் தொலைபேசி உரையா டலை நாடிச்சென்றது. தனது பள்ளியில் பயிலும் பெண்களின் அழகையும், அந்தரங்கங்களையும் கேலியாகப் பேசும் இவர்களின் பேச்சைக் கேட்க முடியாமல் சட்டென்று எழுந்து நடந் தாள் யாழினி.

யாழினியின் கோபத்தை உணர்ந்த அமுதன் தன் நண்பனோடுநடத்திய தொலைபேசி லீலையைச் சுமுகமாக நிறுத்திக் கொண்டு யாழினியைப் பின் தொடர்ந்துசென்றான்.

யாழினி அமுதனின் நடத்தையைக் கண்டு தனது மனக்குமுறல்களை அவளிடம் கோப மாகக் கொட்டிக் கொண்டிருந்தாள். அவள் பேசி முடிக்கும் முன்னே அமுதன் தனக்கும் அந்த உரையாடலுக்கும் சம்பந்தம் இல்லாதது போல் தனது காதல் மோகத்தை யாழினியிடம் வார்த் தைகளால் கோர்த்து அலங்கரித்துக் கொஞ் சினான்.

யாழினியும் அமுதனின் கொஞ்சலுக்கு இடங் கொடுக்காமல் தனது கோபக்கனலை அமுதனி டம் காட்டினாள். உடனே அமுதனும் தன் தவறை ஒப்புக்கொள்ளாது தன் நண்பனோடு நடத்திய உரையாடலை நியாயப்படுத் தினான். வாக்குவாதம் இருவருக்குள்சுனாமியைப் போல் தாக்கத் தொடங்கியது. யாழினி அமுதனி டம் நம் இருவரின் காதல் மிகவும் புனிதமானது என்றால் நீங்கள் இனி இதுபோன்று வக்கிர புத்தி உள்ளவர்களிடம் நட்பு கொள்ளக்கூடாது என ஆவேசமாக அழுது புலம்பினாள்.

காதல்! காதல்! காதல்! வாழ்க்கையில் இதை விட்டா வேற எதுவும் இல்லையா? என்றான் அமுதன். எனது சுதந்திரத்க்கு இடையூறாக யார் இருந்தாலும் அவர்களை விட்டு விலகி விடு வேன். அது என் காதலாக இருந்தாலும் என்று கூறி அவ்விடத்தை விட்டுத் திரும்பிப் பார்க் காமல் சென்றான் அமுதன்.

தனது காத லனின் செயலைக் கண்ட யாழினி இடி விழுந்த தைப் போன்று அதிர்ந் தாள். மகிழ்ச்சி யாகக் காதல னைக் காணவந்த யாழினி மனக் குமுறலு டன் வீடு திரும்பி தனது அறைக் குள் நுழைந்தாள்.

யாழினியின் கவலையான வத னத்தைக் கண்ட தாய் மகளின் அறைக்குச் சென் றார். யாழினி யிடம் அவள் தாய் ஏன் என் யாழினிச் செல்லத்தின் முகம் வாடி உள் ளது என்று வினவி னார். அமுதனின்மேல் இருந்த கோபக்கனலுக் குத் தாய் பலியானார். ஒண்ணும் இல்ல, எனக்குத் தூக்கம் வருது என்று கூறிச் சட்டென்று அறை விளக்கை அணைத்தாள்.

அறையிலிருந்து வெளிவந்த தாய் மகள் வகுப்பு முடிந்து வந்தகளைப்பால் இப்படிப் பேசுகிறாள் என்று நினைத்து தன்னைத்தானே ஆறுதல்படுத்திக் கொண்டு, தனது கணவரிடம் நடந்தவற்றைக் கூறினார்.

அந்த இருட்டறையில் யாழினி தனது கண்ணீர் வெள்ளத்தில்மிதந்து கொண்டிருந்தாள். தனது காதலனின் ஈனச் செயலைத் தாங்க முடியாமலும் அவன்மேல் கொண்ட காதலை மறக்கவும் முடியாது யாழினியின் மனம் தள் ளாடியது. அமுதனின் செயல்களை நினைத்துத் துக்கம் தொண்டையை அடைப்பதைத் தாங்க முடியாமல் தனது வாழ்க்கையே அழிந்து விட்டதே என்று எண்ணித் தன்னிடம் இருந்த அந்த மருந்தில் இரண்டை எடுத்து

விழுங்கி நீரைப் பருகினாள். தனது படுக்கையை மெல்ல வருடித்தலையணையில் சாய்ந்தாள். மின்விசிறியை முதன்முதலாக வாழ் வில் காண்பதைப் போன்று பார்த்துக் கொண்டி ருக்கையில்அவளது விழிகள் மெல்ல மெல்ல மூட தன்னையே மறந்தாள்.

வீட்டின் முன் ஒரே உறவினர்களின் வருகை யும் அழுகுரலுமாக இருக்கத் தன் தாயின் அருகில் செல்கிறாள் யாழினி. தன் தாயைத் தொடுகையில் எந்த ஒருதொடுதலின் உணர்வை யும் உணராத யாழினியின் கைகள்; தன்னைப் போன்ற ஓர் உருவத்தைப் பெட்டிக்குள் கண்டு வியந்து தாயைக் கட்டி அணைப்பதற்கு முன் தன் தந்தையாழினிமா, ஏன் எங்களை இப்படி ஏமாற்றினாய் என்றதைக் கேட்டு அத்திசையைத் திரும்பிப் பார்க்கையில் தனது உடலும் உயிரும் பிரிந்திருந்ததைக் கண்டு வியந்தாள் யாழினி. தனது முட்டாள் தனமான முடிவால் இப் பொழுது பிணமானதை எண்ணி அதிர்ந்தாள். தனது தாயைக் கட்டிப்பிடித்தும் தாய் உணராததை எண்ணி என்ன செய்வதென்று தெரியாமல் வியக்கிறாள்.

ஊரிருந்தும் உறவிருந்தும் ஒற்றுமையாகச் சேர்ந்திருந்தும் யாரிருந்து என்ன பயன், 'என் பயணம் இறுதி என்பேன் என்று கதறி அழுகி றாள். ஒரு காதலுக்காகத் தனது பெற்றோரின் அன்பையும் கனவையும் புதைத்ததை எண்ணித் தன்னைத் தானே வெறுத்தாள். யாழினிக்கு இறுதி அஞ்சலி செலுத்த வந்த உற்றார்உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அவளது ஆசிரியர்கள் வருகையைக் கண்டு கதறினாள். அவள் அழு குரல் அவளுக்கு மட்டுமே இசைக்கப்பட்ட ராக மாக அந்த இரங்கல் வீட்டில் அமைந்தது. வந்த வர்கள் யாழினியின் உயிரற்ற உடலைக் கண்டு அழுதனர். ஒரு நிமிடம் தன்னை நேசிக்கும் பெற்றவர்களையும் அன்புள்ளங்களையும் நினைக்காமல், காதலுக்காக சுயநலமாக இருந்து விட்டோமே என வருந்தினாள். இனி வருந்தி பயனென்ன என்றவாறு இறுதிச் சடங்குகள் முடிந்து தனது உடலைப் பெட்டியில் மூடும் தருணம் தனது தாய் தந்தையின் அழுகுரலை யும்கதறலையும் கண்டு நரகவேதனையாக இருந்தது. எனது தெய்வங்களே என்னை மன் னித்து விடுங்கள் என்று கத்தினாள். எனக்கு நீங் கள் வேண்டும் என்று கதறினாள். யாழினிச் செல் லம் என்ற என் தாயின் குரலைக் கேட்டு எனது கண்கள் மெல்லத் திறந்தன. என்னம்மா, கனவா? பள்ளிக்கு நேரமாகுது; அம்மா சிற்றுண்டி தயாரிக்கிறேன், போய்க் குளி என்றதும் என் தாயின் அழகு வார்த்தையையும் அன்பு வார்த்தையையும் என்னைப் பிரமிக்க வைத்தன. மீண்டும் மறுபிறவி எடுத்ததைப் போன்று யாழினியின் உள்ளம் பிரமித்தது.

தன் தாய் சென்றபின் யாழினி தனது உடலை முதன் முதலாகப் பயந்துதொட்டுப் பார்த்தாள். நேற்று நான் சாப்பிட்ட தூக்க மாத்திரை எனது வாழ்க்கைக்கு ஒரு நல்ல திருப்புமுனை லேசிய மாக அமைந்தது என்று தன்னைத் தானே தெளிவு படுத்திக் கொண்டாள். குளித்துப் பள்ளிக்குத் தயாராகி இறைவனை வணங்கித் தனது மாற்றத்திற்கு நன்றி மலர்களைச் சமர்ப்பித்தாள்.

தாயின் அருகில் சென்று தன்னை மன்னிக் கும்படிமுத்தங்களால் தெரிவித்தாள். அமுதனின் உறவை கானல் நீராக நினைத்து, பள்ளிப் பருவத்தில் அனைத்து மாணவர்களுக்கும் கல் வியே வசந்த காலம் என்று எண்ணி அந்த வசந்த காலத்தைத் தேடிச் செல்கிறாள் யாழினி.

# அய்லானும்...

( 09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொழுதுகளில், யுத்தம் குழந்தைகளையே அதிகமாகப் பலி கேட்டது. அந்தப் பலியெடுப்புகளில் சாதி, மத, வர்க்க வேறுபாடின்றி தமிழ்க்குழந்தைகள் சிதைக்கப்பட்டார்கள். பாடசாலைகளில், வீடுகளில், வீதிகளில், பதுங்கு குழிகளில், ஆலயங்களில் என்று ஈழக்குழந்தைகளை போர் தின்று கொண்டே இருந்தது. குழந்தைகளின் உயிர்கள் மீதான போரின் பசி முள்ளிவாய்க்கால் வரை தொடரவே செய்தது.

ஈழக்குழந்தைகளின் நெஞ்சப் பதற வைக்கும் சடலங்களின் விம்பங்களும் புகைப்படங்களாக வெளிவரவே செய்தன.

அய்லானைப் போல ஒற்றைக் குழந்தையின் சடலம் மட்டுமல்லாது, கூட்டாக போர்க்கழுகால் கொத்திக் குதறி வீசப்பட்ட ஏராளமான குழந்தைச் சதைக்குவியல்கள் இறுதிப் போர்க்காலத்தில் தொடர்ச்சியாக ஊடகங்களில் வெளிவரவே செய்தன. அப்போதெல்லாம் சர்வதேசத்தின் மனச்சாட்சி ஏன் கொஞ்சம் கூட இரங்கவில்லை? அப்படி இரங்கியிருந்தால் அந்தச் சதுப்பு நிலத் துண்டுக்குள் ஒரு இனம் மானமிழந்து, வாழ்விழந்து போயிருக்காதே.

அய்லானின் புகைப்படத்தால் சிரிய மக்களின் தலையெழுத்து மாற முடியுமென்றால், ஏன் எங்கள் தேசக் குழந்தைகளின் சடலப் புகைப்படங்களால் எங்கள் தலைவிதியை மாற்ற முடியாமல் போனது?

போர் முடிந்த பின்னர் கூட குழந்தைப் பலியெடுப்புகள் பற்றிய ஆதாரங்கள் புகைப்பட வடிவில் வெளிவரவே செய்தன. புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் இராணுவக் காவலரணில் வைத்து பிஸ்கட் உண்ணும் புகைப்படமும், அந்த பிஸ்கட்டை உண்ட சில நிமிடங்களில் சுட்டுக் கொல்லப்பட்ட புகைப்படமும் போருக்குப் பின்னர் சனல்-4' ஊடகத்தில் வெளியாகி, உலகத்தின் கண்ணில் படவே செய்தது. அப்போது கூட இப்போது அய்லானின் சடலத்தைக் கண்டு பதறியதைப் போல உலகம் ஒப்பாரி வைக்கவில்லை. சின்னதான ஒரு அனுதாபப் பார்வையோடு பாலசந்திரனின் சடலத்தை உலகம் கடந்து சென்றது.

ஈழக்குழந்தைகள் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்ட புகைப்படங்களை கண்டும் காணாமல் இருந்த உலகம், இப்போது மட்டும் அய்லானின் சடலப் புகைப்படத்தைக் கண்டு இரத்தக் கண்ணீர் வடிப்பது ஏன்?

காரணம் இருக்கிறது. ஈழக்குழந்தைகள் கொல்லப்பட்ட போது , போரை நடத்திக் கொண்டிருந்த அரசின் பின்பக்கமாக இதே உலகநாடுகள் நின்றிருந்தன. குழந்தைகளின் சாவுகளைத் தடுப்பதை விடவும், போரை ஈவிரக்கமின்றி நடத்துவதே அந்த நாடுகளின் குறியாக இருந்தன. இலங்கை அரசுக்கு உலக நாடுகள் அள்ளிக் கொடுத்த ஆயுதங்களால் தான் எங்கள் தேசத்துச் சிறிசுகள் சின்னாபின்னமாக்கப் பட்டனர். ஆயுத விற்பனை, பூகோள அரசியல் நலன் என்பவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்த்த உலக நாடுகளுக்கு ஈழக்குழந்தைகளின் சாவுகள் நிகழும் போது குருடாக நடிப்பதே லாபமாக இருந்திருக்க வேண்டும். அதனால்தான் அய்லானை விடவும் உருக்குலைந்த ஈழக்குழந்தைகளின் சடலங்களை நேரில் கண்டும் கூட உலகின் ஆன்மா துடிக்கவில்லை.


ஆனால் சிரியாவின் கதையோ வேறு. சிரிய அரசை உலகின் பல நாடுகளுக்கும்-குறிப்பாக அமெரிக்காவுக்கு- கண்ணிலும் காட்டக் கூடாது. சிரியாவை நேரடியாகத் தாக்குவதற்கு போதிய சாட்டுக்கள் இப்போதைக்கு சிக்கவில்லை. எனவே சிரியாவை எப்படி வீழ்த்துவதென்று அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் கையைப் பிசைந்து கொண்டிருக்கின்றன. எகிப்து, லிபியாவைப் போல அரபு வசந்தம்' ஒன்றை சிரியாவிலும் வீச வைப்பதே உலகநாடுகளின் (உலக நாடுகள் என்றால் அதன் அர்த்தம் அமெரிக்கா என்றாகிவிட்டது) திட்டம். அதற்கு முதல் படியாக சிரிய மக்களைத் தன் வசப்படுத்த வேண்டிய தேவை உலக நாடுகளுக்கு உண்டு. எனவே தான் அய்லானின் புகைப்படத்துக்கு இத்தனை தூரம் நீலிக்கண்ணீர் வடிக்கிறது சர்வதேசம். பாவம், பாலகர்களின் சடலங்களும் அரசியல் பகடைக்காய்களாகி விட்டன.

# விடைதெரியா...

( 10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கடல் மட்டம் அறுநூறு அடி வரை தாழ்வாக இருந்த பொழுது கற்கால மனிதர்கள், இந்தியாவில் இருந்து இலங்கைக்குச் சென்றிருக்கிறார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

அதன் பிறகு கடல் மட்டம் அறுநூறு அடி உயர்ந்ததற்கு நிலத்தின் மேல் இருந்த பனி உருகிக் கடலில் கலந்ததே காரணம் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர். ஆனால் நாலாயிரம் அடி வரை ஆழமுள்ள கடல் பகுதியால் பிரிக்கப்பட்டிருக்கும் புளோரஸ் திமோர் ஆகிய தீவுகளுக்கும் ஆஸ்திரேலியக் கண்டத்திற்கும் கற்கால மனிதர்கள் எப்படி சென்றார்கள் என்ற கேள்விக்கு புளோரஸ் தீவிற்கு கற்காலக் குள்ள மனிதர்கள் பாலி தீவில் இருந்து சுனாமி அலைகளால் அடித்துக் கொண்டு வரப்பட்ட மரக் கிளைகள் மூலம் வந்திருக்கலாம் என்கிறார் டிம்வைட் என்ற ஆராய்ச்சியாளர்.



ஆனால், ஆசியக் கண்டத்திலிருந்து நாலாயிரம் அடி ஆழமுள்ள கடல் பகுதியால் பிரிக்கப்பட்டிருக்கும் ஆஸ்திரேலியக் கண்டத்தில், இருக்கும் புளோரஸ் தீவிற்கு குள்ள மனிதர்கள் எப்படி சென்றிருப்பார்கள் என்ற கேள்விக்கு, நாற்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்தோனேசியப் பகுதியில் கடல்மட்டம் நாலாயிரம் அடி வரை தாழ்வாக இருந்திருக்கும். ஆசியக் கண்டத்திற்கும் ஆஸ்திரேலியக் கண்டத்திற்கும் இடையில் நிலத் தொடர்பு இருந்திருக்கும். அதன் வழியாகவே கற்கால மனிதர்கள் ஆசியக் கண்டத்திலிருந்து ஆஸ்திரேலியக் கண்டத்திற்கு நடந்தே தான் சென்றிருப்பார்கள். அதன் பிறகு கடல் மட்டம் உயர்ந்திருக்கும்.

அதே நேரத்தில் நிலப் பகுதியும் ஆங்காங்கே உயர்ந்ததால், தொடர்ச்சியாக இருந்த நிலப் பகுதி பல துண்டுகளாக உடைந்ததுடன், கடல் மட்டமும் உயர்ந்ததால் பல தீவுகளாக உருவானது. அதனால் கற்கால மனிதர்களால் தீவை விட்டு வெளியேற இயலாமல் தீவுகளிலேயே தனிமைப்படுத்தப் பட்டு இறந்துபோயிருப்பார்கள். என்று குள்ள மனிதர்கள் குறித்து யூகமாக ஒரு கதையைச் சொல்லியிருக்கிறார்கள், தெளிவில்லாத ஒரு கதையைச் சொல்லியிருக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். இந்தக் கதைக்கான முழுவடிவம் இன்னும் ஆராய்ச்சிக்குள்தான் இருக்கிறது. விடை கிடைக்குமா?

# அரபு நாடுகளின்...

( 07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டொலர்களுக்கு மேலும் ரஷ்யாவிற்கு 105 டொலர்களுக்கு மேலும் இருக்க வேண்டும்.

**உறுதியான மன்னர் ஆட்சி தொடருமா**

சவுதி அரேபியாவின் மன்னராக தற்போது இருக்கும் சல்மன் பின் அப்துலஸீஸ் அல் சவுத் அவர்களுக்குப் பின்னர் ஓர் வாரிசுப் போட்டி உருவாகலாம். முடிக்குரிய இளவரசர் மொஹமட் பின் நயீஃபிற்கும் துணை இளவரசர் மொஹமட் பின் சல்மனுக்கும் இடையில் வாரிசுப் போட்டி உருவாக வாய்ப்புண்டு என அரசியல் நோக்குனர்கள் கருதுகின்றனர். மன்னர் ஓய்வு பெறும் போது அவருக்குப் பிடித்தவரும் அவரது கொள்கைகளுடன் ஒத்துப் போகும் துணை இளவரசரை அரசராக முடி சூட்டலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது. இது ஒரு வழமைக்கு மாறான செயலாகும். இதனால் சவுதியில் ஒரு வாரிசுப் போட்டியும் உள்நாட்டுக் குழப்பமும் உருவாகலாம்.

அரபு நாடுகள் ஐரோப்பிய ஒன்றியம் போல் ஆசியான் போல் தமக்குள்ளே வலுவான ஒரு நாடுகளின் கூட்டமைப்பை உருவாக்க வேண்டும். வளைகுடா ஒத்துழைப்பு ஒன்றியம் தற்போது உள்ளதிலும் பார்க்க சிறந்த ஓர் அரசியல், பொருளாதார மற்றும் படைத்துறைக் கூட்டமைப்பாக மாற்றப்பட வேண்டும். ஏற்கனவே இது பற்றிய முன் மொழிவுகள் மற்ற நாடுகளால் முன்வைக்கப்பட்ட போது சவுதி அரேபியா அதை எதிர்த்தது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைப் போல் ஒரே மாதிரியான மனித உரிமை நிலைப்பாடு, எல்லைப் பிரச்சனை இன்மை, ஒருவருக்கு ஒருவர் பொருளாதாரக் கைகொடுப்பு , பொதுவான கலாச்சாரம் ஆகியவற்றை அரபு நாட்டில் உருவாக்க முடியும்.




கடந்த ஒரு வருடத்தில் நோர் மாசி பவுடர் கலவையைப் பாவித்த, 9 மாகாணங்களிலுள்ள 359 குடும்பத் தலைவிகளுக்கிடையில், LMRB நிறுவனத்தால் 2015 மே மாதம் நடாத்தப்பட்ட ஆய்வுகளின்படி இது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

முன்னர் இருந்து எங்கள் இல்லத்தரசிகள், அவர்கள் சமைக்கும் உணவுகளில் மாசிக்கருவாட்டை சேர்த்து அதன் சுவையை உணவுடன் சுவை பார்த்தார்கள். அன்றிலிருந்து இன்று வரை இந்த மாசிக்கருவாடு இலங்கையிலுள்ளவர்களில் பிரசித்தி பெற்றுள்ளமை நாம் அறிந்த உண்மை.

மாசிக்கருவாடு பாவனையின் அவசியம் மற்றும் ஆர்வம் எங்கள் இல்லத்தரசிகள் மத்தியில் தற்போது குறைந்துள்ளது. என்னுடன் ஒரு தடவை ஓர் பெண்மணி பேசிய போது "ஐயோ இப்போ மாசிக்கருவாட்டின் விலையைப் பாருங்கள். அதனை வீட்டுக்கு வாங்கி வந்த காலம் கூட ஞாபகமில்லை. அத்துடன் கடைகளில் விற்பனையாகும் மாசிக்கருவாட்டின் மேல் நம்பிக்கையுமில்லை" என்று சொன்னார்.

இதோ அதற்கு ஒரு தீர்வு கிடைத்துள்ளது. நீங்கள் விரும்பிய தரத்தில் நோர் அறிமுகப்படுத்தியுள்ள நோர் மாசி பவுடர் கலவை இப்போதே உங்கள் இல்லங்களில் இருக்கலாம். அதுபோலவே அதிலுள்ள சுவையையும் நீங்கள் விரும்பியிருக்கலாம். எனவே தான் இது மிகச் சிறந்த தரத்திலான உற்பத்தியாகக் கருதப்படுகின்றது.

சுறுசுறுப்பாக இயங்கும் எங்கள் இல்லத்தரசிகளுக்கு மாசிக்கருவாட்டை பணம் கொடுத்து வாங்கி வந்து வீட்டில் கழுவி காய வைத்து இடித்து பொதி செய்து வைத்திருப்பது சிரமமாக இருப்பதனால், நாம் நோர் மாசி பவுடர் கலவையை பாதுகாப்பாகவும் தூய்மையாகவும் தயாரித்துள்ளோம். நீங்கள் எதிர்பார்ப்பது போன்றே புதிய மீன்கள் மற்றும் மிகச் சிறந்த மளிகைப் பொருட்கள் கலந்து தயாரிக்கப்படும் இந்த உற்பத்தி உங்கள் உணவுகளில் அதிக சுவையை சேர்ப்பது போன்றே அதிக பெறுமதியையும் சேர்க்கின்றது. அது மட்டுமா நோர் மாசி பவுடர் கலவை கலந்து தயாரிக்கப்படும் உணவுகளில் ஒவ்வொரு வாயும் அறிந்து கொள்ளும் இந்த சுவை நிச்சயமாய் உங்களையும் ரசிக்கவும் சுவைக்கவும் தூண்டும். அதனால் தான் நோர் மாசி பவுடர் கலவையை சுவை பார்த்த இல்லத்தரசிகள் 10 இல் 9 பேர் இந்த சுவைக்கு மாறியுள்ளார்கள்.

நீங்கள் இன்னும் இந்த சுவையின் மாற்றத்திற்கு மாறாமல் இருந்தீர்களானால்...அதற்கான காலம் இது தான். 0722 000 666 மிஸ் கோல் ஒன்று கொடுத்தீர்களானால் உங்களுக்கு இலவசமாகவே நோர் மாசி பவுடர் கலவை சாம்பள் பெக் ஒன்றினைப் பெற்றுக் கொள்ள முடியும். எனவே நீங்களும் இன்றே இந்த சுவையின் மாற்றத்திற்கு மாறி உங்கள் உணவின் சுவையை மேலும் அதிகரித்துக் கொள்ளுங்கள்.



நோர் செப் - சதுரிகா அனுராதா

0112 629 629 அழையுங்கள்




இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2015 செப்டெம்பர் 09ஆம் திகதி வெளியிடப்பட்டது.